வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 31.10.2023 செவ்வாய்க்கிழமை | இதழ் : 326 | பக்கங்கள் : 16




# அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கும்

## ஜனாதிபதி ரணில் உறுதி



கொழும்பு, ஒக்ரோபர் 31

**2024 வரவு - செலவு திட்டத்தில் அனைத்து அரச ஊழியர்களின் சம்பளமும் அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக்கே இந்த உறுதிமொழியை வழங்கினார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.**

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புடன் தனியார் துறையினருக்கும் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுப்பது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை கூடியது. இதன்போதே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

அரசாங்கம் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கப் போகிறது என்பதை அறிந்து தேசிய மக்கள் சக்தி (ஜே. வி. பி.) தமது அழுத்தம் காரணமாகவே இது இடம்பெற்றதாகக் காட்ட முற்படுகின்றது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பொருட்களின் விலைகள் தினமும் அதிகரிக்கும் நிலையில் உழைக்கும மக்களின்சம்பளத்தை அதிகரிப்பதே தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை என்றும் அவர் கூறினார்.

நிதி அமைச்சராகவும் பதவி வகிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் நவம்பர் 13ஆம் திகதி தனது மூன்றாவது வரவு - செலவு திட்டத்தை பாராளுமன்றில் சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (ஐ)

# யாழ். போதனா மருத்துவமனையில் இரத்த வகைகளுக்கு தட்டுப்பாடு!

## குருதி தானம் செய்யுமாறு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ். போதனா மருத்துவமனையில் அனைத்து இரத்த வகைகளுக்கு பற்றாக்குறை நிலவுகிறது என்று இரத்த வங்கி பிரிவு அறிவித்துள்ளது.

மருத்துவமனையில் இரத்த சோகை, புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் மற்றும் இரத்த வகையை மாற்றும் தேவையுடைய நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்நிலையில், போதியளவில் இரத்த வகைகள் இல்லை.

11

# வடக்கில் பௌத்த விகாரைகளை பாதுகாக்க உயர் நீதிமன்றில் மனு

## பதிலளிப்பதற்கு அவகாசம்!

கொழும்பு, ஒக். 31

வடக்கு மாகாணத்தில் உள்ள தொல்பொருள் மதிப்புள்ள பௌத்த விகாரைகளை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கான உத்தரவை தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் நாயகம் மற்றும் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு பிறப்பிக்க வேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப் பட்ட மனு தொடர்பில் பதில் வாதங்களை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் நேற்று

11

# சம்பந்தன் தமிழரின் அடையாளம் அவரின் இடத்துக்கு எவருமில்லை!

## விக்னேஸ்வரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

சம்பந்தன் வட, கிழக்கு தமிழ் மக்களின் ஓர் அடையாளம். அந்த அடையாளத்தை வெளியேற்றினால் அவர் இடத்துக்கு வரக்கூடியவர்கள் எவரும் இல்லை - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன்.

பாராளுமன்ற உறுப்பினர் க. வி. விக்னேஸ்வரன் கேள்வி - பதில் அறிக்கையை ஊடகங்களுக்கு வெளியிடுவது வழமை.



இவ்வாறு நேற்று வெளியிட்ட கேள்வி - பதிலிலேயே அவர் மேற்கண்டவாறு

11

# சுமந்திரனின் கருத்து விவகாரம்:

## மத்திய குழு கூட்டத்துக்கு முன்னர் சம்பந்தனை சந்திக்கிறார் மாவை

கொழும்பு, ஒக். 31

தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவை தம்மை சந்திக்குமாறு அழைப்பு விடுத்துள்ளார் என்று அறிய வருகின்றது.

இலங்கை தமிழரசு கட்சியின் பெருந் தலைவர் இரா. சம்பந்தன் தனது

11



# எட்டு மாதங்களில் மட்டும் 7,523 சிறுவர் துஷ்பிரயோகம்!

கொழும்பு, ஒக். 31

இந்த ஆண்டில் ஓகஸ்ட் மாதம் வரையான 8 மாதங்களில் 7 ஆயிரத்து 523 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அத்துடன், கடந்த செப்ரெம்பர் மாதத்தில் மட்டும் 168 துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. பாதிக்கப்பட்டவர்கள் அனைவருமே 16 வயதுக்கு உட்பட்டவர்களாவர் தேசிய சிறுவர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

2021 ஆம் ஆண்டு நாட்டில் சிறுவர்களுக்கு எதிராக 11 ஆயிரம் குற்ற சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. 2022 ஆம் ஆண்டு பதிவான மொத்த துஷ்பிரேயோக வழக்குகளில் 41 வீதமானவை சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளாகும்.

இந்நிலையில், கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 168 துஷ்பிரயோக சம்பவங்கள் தவிர, ஓகஸ்ட் வரையான 8 மாதங்களில் சிறுவர்களுக்கு எதிராக 7,523 சம்பவங்கள் பதிவாகின என்று சிறுவர்

11

# 1,000 பேருக்கு கண்புரை சிகிச்சை!

யாழ்ப்பாணம்,ஒக். 31

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளும் சேவை நேற்று திங்கட்கிழமை ஆரம்பமானது. இந்த சத்திர சிகிச்சை எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை தினமும் நடைபெறவுள்ளது. உலக பார்வை தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம், இரத்தினபுரி மருத்துவமனைகளின் நட்புறவை

11

# 2024 ஜனாதிபதி தேர்தலில் பெரமுனவின் வேட்பாளரே

## அந்தக் கட்சி அறிவிப்பு



கொழும்பு, ஒக். 31

கூட்டணி அரசாங்கத்தில் ஜனாதிபதி எவ்வாறு செயல்பட வேண்டும் என்று ஆளும் தரப்பின் உறுப்பி னர்கள் குறிப்பிடுவது நியாயமானதே. 2024 ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே களமிறக்குவோம் - என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள பொதுஜன பெரமுனவின் தலைமை பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சுதந்திரத்துக்கு பின்னரான காலப் பகுதியில் நாட்டுக்காக எமது கட்சியே அர்ப்ப ணிப்புடன் செயல் பட்டது. 2019ஆம் ஆண்டு பெரும்

11




# மசகு எண்ணெய் விலை உயர்ந்தது

நியூயோர்க், ஒக். 31

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை 3 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இதன்படி பிரெண்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 89.58 டொலராகவும் டபிள்யூ. ரி. ஐ. மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 84. 49 டொலராகவும் உயர்ந்துள்ளது. (ஐ)

## இப்படியும் நடக்கிறது

அண்மைக்காலத்தில் நடக்கும் சில சம்பவங்களைத் தொகுத்துப் பார்த்தால் இலங்கை அரசியலில் என்ன நடக்கின்றது என்பதை புரிந்துகொள்ளலாம் என்கிறார் தெற்கின் மூத்த அரசியல் ஆய்வாளர் ஒருவர்.

அவரின் கருத்தைக் கேட்டபோது, தெற்கிலும் ஆய்வாளர்கள் நம்மைப்போலத்தான் யோசிக்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ளலாம்.

சில வாரங்களுக்கு முன்னர் மேற்கு நாடுகளுக்கு சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கு நாடுகளை நோக்கி கைநீட்டி சில விடயங்களை உரக்கச் சொன்னார்.

ஜேர்மனியில் ஒரு முக்கிய தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில், ஐக்கிய நாடுகள் சபையையும் ஜெனிவா மனித உரிமை பேரவையையும் கண்டித்தார். மேற்கு நாட்டவர்கள் எங்களை தரக்குறைவாகவே பார்க்கிறார்கள் என்றும் தனது கோபத்தை வெளிப்படுத்தினார்.

அது முடிந்து நாடு திரும்பியதும், சீனாவுக்கு பயணம் செய்து அவர்களின் பட்டு சாலை திட்டத்தின் பத்தாவது ஆண்டுவிழாவில் கலந்துகொண்டு அதனைப் பாராட்டினார்.

இந்த சம்பவங்களை தொகுத்துப் பார்த்தால், அவர் தான் மேற்குலகின் ஆள் என்ற விம்பத்தை மாற்றியமைக்க முயல்கிறார் என்று சிலரும் சீனாவிடம் சரணடைய விரும்புகின்றார் என்று வேறு சிலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

இதனால்தான், அமெரிக்க தூதுவர் அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்துக்கு சென்று அவர்களைச் சந்தித்து படங்களுக்கு 'போஸ்' கொடுத்து திரும்பினார். அவரின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா தமக்கு வேறு தெரிவுகளும் இருக்கின்றன என்று ரணிலை எச்சரித்திருக்கின்றது என்றும் தெற்கில் சில ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

ஆனால், ரணில் அப்படி இந்த நேரத்தில் அதனைச் செய்ய முயற்சிப்பாரா என்பது உறுத்தலுக்குரிய கேள்வியாக இருந்தது. இலங்கையின் ஆட்சியிலுள்ளவர்கள் தங்களுக்கு வேண்டப்படாதவர்களாக இருந்தால், அவர்களை பதவியில் இருந்து வெளியேற்றுவதற்கு அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் மாத்திரமல்ல, நமது பக்கத்து நாடும் என்ன செய்யும் என்பதை ரணில் அறியாதவரல்ல.

இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டில் ராஜபக்ஷ சாம்ராச்சியத்தை வீழ்த்துவதற்காக அந்த நாடுகள் எப்படியெல்லாம் திட்டமிட்டு பணியாற்றின என்பதை முழுமையாக அறிந்து வைத்திருப்பவர் ரணில். அவ்வாறு இருக்கையில் அப்படியொரு விஷப்பரீட்சையில் அவர் ஈடுபட முயலப் போவதில்லை என்பதை அவரை அறிந்தவர்கள் அறிவார்கள்.

அமெரிக்க தூதுவர் தேசிய மக்கள் சக்தி அலுவலகத்துக்கு சென்று வந்தமை பற்றி நண்பர் ஒருவர் சிலாகித்தபோது, 'அறகலய' - போராட்டம் நடந்துகொண்டிருந்தபோது, அடிக்கடி அவர் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சென்று சந்தித்து வந்ததை அவருக்கு நினைவூட்டினேன். அப்போதெல்லாம் கோட்டாபய அமெரிக்கா தன்னுடன்தான் இருக்கின்றது என்று நம்பிக்கொண்டிருந்தார். ஆனால், இன்று மீண்டும் அமெரிக்க குடியுரிமையைப் பெறுவதற்காக அவர் முயல்கின்றபோதிலும், அவரின் விண்ணப்பத்தைக்கூட வாங்குவதற்கு அமெரிக்கத் தூதுவர் தயாராக இல்லையே கவனித்தீர்களா என்று கேட்டேன்.

அந்த நண்பரிடம் பதில் இருக்கவில்லை. அவருக்கு நான் சொன்னேன், 'நீங்கள் எனது நல்ல நண்பர், உங்களைப் பற்றி நான் வேறு ஒருவரிடம் சற்று கடுமையாக கருத்தைச் சொல்லிவிட்டு, நான் எதற்காக அப்படிச் சொன்னேன் என்று உங்களிடமே சொன்னால் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்தானே. அதனைத்தான் ரணிலும் செய்திருக்கிறார் என்று நினைக்கின்றேன். சீனாவிடமிருந்து காரியங்களை செய்து முடிப்பதற்காக நான் உங்களை கடிந்துகொள்வேன், கண்டுகொள்ளாதீர்கள் என்று சொல்லிவிட்டு செய்கிறாரோ என்னவோ' என்றேன்.

இப்போது தேசிய மக்கள் சக்தி, ரணிலை வீழ்த்துவதற்கு எப்படியெல்லாம் தயாராகின்றது என்பதை அமெரிக்க தூதுவர் ஊடாக ரணில் அறிந்து வைத்திருப்பாரோ என்னவோ?

**-ஊர்க்குருவி.**

# வவுனியாவில் திருடப்பட்ட ஐம்பொன் சிலை யாழில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக். 31

வவுனியாவில் திருடப்பட்டு யாழ்ப்பாணத்துக்கு கடத்தி வரப்பட்ட ஐம்பொன் சிலையை யாழ்ப்பாணம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் 30 இலட்சம் ரூபாய் மதிப்பு வாய்ந்த இந்த சிலையை நேற்றைய தினம் யாழ்ப்பாணம் நகரை அண்டிய ஐந்து சந்திப் பகுதியில் வைத்து இந்த சிலை கைப்பற்றப்பட்டது.

சிலையை கடத்தியவர் தலைமறைவான நிலையில் அவரை தேடி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் ரி. மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸாருக்குகிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்த சிலை மீட்கப்பட்டது. (ஐ-03)



# அதிக விலைக்கு அரிசி விற்றால் 1977 இலக்கத்துக்கு அறிவியுங்கள்

கொழும்பு, ஒக். 31

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் தொடர்பில் 1977 என்ற இலக்கத்துக்கு உடனடியாக அறிவிக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை நுகர்வோரை கேட்டுள்ளது.

வெள்ளை மற்றும் சிவப்பு நாட்டு அரிசி கிலோ ஒன்றுக்கு 220 ரூபாயாகவும் கீரி சம்பா கிலோ ஒன்றுக்கு 260 ரூபாயாகவும், சம்பா கிலோ ஒன்றுக்கு 230 ரூபாயாகவும், சிவப்பு மற்றும் வெள்ளை பச்சை அரிசி கிலோ ஒன்றுக்கு 210 ரூபாயாகவும் நுகர்வோர் அதிகார சபை கட்டுப்பாட்டு விலை நிர்ணயித்துள்ளது.

கட்டுப்பாட்டு விலைக்கு அப்பால் அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களை கண்டுபிடிக்க சோதனைகளை ஆரம்பித்துள்ளதாகவும், கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும் எனவும் நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பல வியாபாரிகள் அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்து வாடிக்கையாளர்களிடம் இருந்து தினமும் முறைப்பாடுகளை பெறுவதாக அதிகார சபையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

# தேர்தல்களை எதிர்கொள்வதற்காக சுதந்திர கட்சி தனிக் குழு அமைப்பு

கொழும்பு, ஒக். 31

அடுத்த வருடம் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில் பல்வேறு கட்சிகளும் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்காக தயாராகி வருகின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் தேர்தலை முகங்கொடுக்க தயாராகி வருகின்றது என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையில் தமது கட்சிகளின் மறுசீரமைப்பு தேர்தலுக்கான நகர்வுகளை முன்னெடுப்பதற்காக சிறீ லங்கா சுதந்திரக் கட்சி விசேட குழுவொன்றை நியமித்துள்ளதுள்ள தாக சுதந்திரக் கட்சியின் மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

தேசிய மட்டத்திலான தேர்தல்களில் சுதந்திரக் கட்சி எவ்வாறு செயற்பட வேண்டும். அதற்கு எவ்வாறு தயாராக வேண்டும் என்பன உள்ளிட்ட விடயங்களை இக்குழு தீர்மானிக்கும் எனவும் மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதனை எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டும். அதற்காகவே இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் இக்குழு கூடவுள்ளது. அதேவேளை எதிர் வரும் தேர்தலுக்கான தயார்படுத்தல்களை ஆரம்பித்துள்ளோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# நாச்சிக்குடா விபத்தில் 3 பேருக்கு காயம்!

கிளிநொச்சி, ஒக். 31

நாச்சிக்குடா சந்தியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விபத்தில் மூவர் காயமடைந்தனர்.

முழங்காவில் - நாச்சிக்குடா சந்தியில் பூநகரியிலிருந்து மன்னார் நோக்கி பயணித்த ஓட்டோவும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், ஓட்டோவில் பயணித்த மூவர் காயங்களுக்கு உள்ளாகினர். ஓட்டோ சாரதி சிறு காயங்களுடன் தப்பித்தார். காயமடைந்தவர்கள் முழங்காவில் ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# 19 கொலைகள் செய்தாராம் முன்னாள் சிப்பாய் கைது!

கொழும்பு, ஒக். 31

போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவர் 19 ஒப்பந்த கொலைகளை செய்தாரென்று கூறினாரென கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மாகந்துரே மதுஷ் உட்பட முன்னணி பாதாள உலக தலைவர்களின் ஒப்பந்தங்களை நிறைவேற்றியதாகவும் சந்தேக நபர் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பியோடிய இந்த சந்தேக நபர், தங்கலே சுத்தா என அழைக்கப்படும் நிலந்த குமார என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டையில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரியவந்த தகவலின் அடிப்படையில், உனவடுன பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்றையும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த சந்தேக நபர் 19 கொலைகளை செய்தார் என்று கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும், இது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் மேலதிக விசாரணைகள் தொடர்வதாகவும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# பணிப்புறக்கணிப்பால் அலுவலக ரயில்கள் ரத்து



கொழும்பு, ஒக். 31

ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பணிப்புறகணிப்பின் காரணமாக நேற்று திங்கட்கிழமை மாலை திட்டமிடப்பட்ட பல அலுவலக ரயில் சேவைகள் ரத்தாகின என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை முதல் பல ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமைக்கு சமுகமளிக்கவில்லை. இதனால், ரயில் சேவைகளை இரத்து செய்ய வேண்டியேற்பட்டதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்தது.

இதன்படி, நேற்று காலை மற்றும் மாலையில் இயக்கப்படவிருந்த அலுவலக ரயில்கள் உட்பட மொத்தம் 12 ரயில்கள் நேற்று மாலை வரை இரத்தாகியிருந்தன. (ஐ)

ஈழநாடு
Eelanadu
31.10.2023 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சீனக் கப்பல் விவகாரம்

சீனாவின் ஆய்வு கப்பலான ஷியான் 6 ஆய்வு பணிகளை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. இவ்வாறானதொரு கப்பல் வருவது தொடர்பில் ஏற்கனவே சர்ச்சைகள் வெளியாகியிருந்தன. இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆரம்பத்தில் குறித்த கப்பலுக்கு அனுமதி அளிக்கவில்லையென்றும் - இந்தியாவின் கரிசனைகளுக்கே தாம் முக்கியத்துவளிப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். எனினும், இலங்கையால் நிர்ணயிக்கப்படும் தராதரங்களுக்கு அமைவாக இருந்தால் அனுமதிப்பதில் பிரச்னையில்லை என்றும் தெரிவித்திருந்தார். சமீபத்தில், ஐ. நா. பொதுச் சபை கூட்டத்தில் பங்குகொள்வதற்காக அமெரிக்கா சென்றிருந்தபோது அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் கீழ் நிலைச் செயலர் விக்ரோறியா நூலண்ட் இது தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார். அப்போதும் தாம் தாரதரங்களை நிர்ணயம் செய்திருப்பதாகவும் அதற்கமைவாக இருந்தால் மட்டுமே கப்பலை நாட்டுக்குள் அனுமதிப்போம் எனவும் சப்ரி குறிப்பிட்டிருந்தார்.

இதே வேளை, ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குகொள்வதற்காக சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்க சிந்தனைக்கூடமொன்றின் நிகழ்வில் பங்குகொண்டிருந்தார். இதன்போதும், சீனாவின் கப்பல் விவகாரம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டிருந்தது - அதாவது, சீனாவின் உளவுக் கப்பலான யுவான் 5 அம்பாந்தோட்டையில் நங்கூரமிடப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்து. உளவுக் கப்பலென்று எதுவுமில்லை - உளவுக் கப்பல்களை எவரும் வைத்திருக்கவுமில்லை - என்றவாறு ரணில் எள்ளல் பாணியில் பதிலளித்திருந்தார். அத்துடன், அமெரிக்காவின் மூலோபாய நகர்வுகள் சிலவற்றை விமர்சித்தும் இருந்தார்.

அமெரிக்க நிபுணர்களின் ஆய்வுகளின்படி சீனா சாதாரண மீன்பிடி படகுகளையே சீன இராணுவத்தின் தேவைகளுக்காக பயன்படுத்தி வருவதாகக் கூறுகின்றனர். இந்த விடயங்கள் தொடர்பில் ஆய்வு செய்யக்கூடிய நிபுணர்கள் ஒப்பீட்டடிப்படையில் இந்தியாவில் பெரியளவில் இல்லை. இந்திய ஊடகங்கள் அமெரிக்க ஆய்வாளர்களின் கருத்துகளை மேற்கோள் காட்டியே சில விடயங்களை குறிப்பிடுகின்றன. இந்து சமுத்திர பிராந்தியத்தை அடிப்படையாகக் கொண்டு, சீனா கடற்படை விரிவாக்கத்தை மேற்கொண்டுவருவதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சின் அறிக்கைகள் கூறுகின்றன. இந்த பின்புலத்தில், இலங்கையில் சீனாவின் கப்பல்கள் வந்து செல்லும் விடயமும் நோக்கப்படுகின்றது.

இந்தியாவின் உடனடி அயல்நாடான இலங்கையில் சீன மக்கள் இராணுவத்தின் நிர்வாகத்தின் கீழ் இருக்கின்ற கப்பல்கள் தொடர்ச்சியாக வருவதை இந்தியா எச்சரிக்கையுடன்தான் நோக்கும். ஏனெனில், இந்தியாவின் முக்கிய இராணுவ மற்றும் பாதுகாப்பு கட்டமைப்புகள் தென்னிந்தியாவில் இருக்கின்றன. இந்த நிலையில், உளவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தொழில்நுட்ப ஆற்றலை கொண்டிருக்கும் சீன கப்பல்கள் இலங்கையின் துறைமுகத்தில் தங்கியிருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானதுதான். சீனா உளவு பார்த்ததற்கு ஆதாரங்கள் இல்லையென்று கூற முடியுமானால் - உளவு பார்க்கவில்லை என்பதற்கும் ஆதாரங்களை காண முடியாது. உளவுக் கப்பலென்று ஒன்றில்லையென்று ரணில் சாதாரணமாகக் கூறிவிட்டுச் செல்லக்கூடிய விடயமல்ல இது.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசு, கடந்த ஆண்டு தாய்வான் சென்றிருந்தார் - இதனை ஆட்சேபித்த சீனா ஜெட் விமானங்களை தாய்வான் வான் பரப்புக்குள் அனுப்பி அந்த நாட்டை அச்சுறுத்தியது. கூடவே, தாய்வானை சுற்றி வட்டமிடும் வகையில் கூட்டு இராணுவப் பயிற்சியை மேற்கொண்டு அதனை அச்சுறுத்தியது. ஒருவேளை அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான கப்பலொன்று தாய்வானுக்குள் சென்றிருந்தால், சீனா எவ்வாறு நடந்துகொண்டிருக்கும்? இந்த இடத்தில் இந்தியா சீனாவுக்கு கடும்தொனியில் - இதுவரையில் பதிலளிக்கவில்லை.

# ஆலய வழிபாட்டில் ஈடுபடுவோருக்கு இடையூறுகளை ஏற்படுத்தக்கூடாது!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், ஒக். 31

மக்கள் தங்களின் நம்பிக்கையின் அடிப்படையில் ஆலய வழிபாடுகளை மேற்கொள்வதற்கு இடையூறுகள் எவையும் ஏற்படுத்தக் கூடாது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

மறவன்புலவு மேற்கு சிதம்பர சித்தி விநாயகர் ஆலயம் பரிபாலன சபையினரால் பூட்டப்பட்டமை தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு பிரதேச மக்களால் கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்த விவகாரத்தை சுமுகமாக தீர்க்கும் நோக்கிலான கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, சம்பந்தப்பட்ட தரப்பினரின் கருத்துகளை கேட்டறிந்த அமைச்சர், ஒரு வார காலத்தில் ஆலய பரிபாலன சபையினருடன் கலந்துரையாடி பிரதேச மக்கள் விரும்பிய நேரத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கூறினார். (ஐ)

# நோயாளர்களின் உரிமைகளை மருத்துவமனைகள் காக்க வேண்டும்!

## வடக்கு ஆளுநர் சார்ள்ஸ்

யாழ்ப்பாணம், ஒக். 31

அரச மருத்துவமனைகளில் கட்டாயமாக நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எச். எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாண போதனா மருத்துவமனையில் இடம்பெறுகின்ற இலவச கண்புரை சத்திர சிகிச்சை நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்

நேற்று மருத்துவமனையின் கண் சிகிச்சை பிரிவுக்கு வருகை தந்தபோது வழமையாக அரச மருத்துவமனைகளில் ஒருவித நாற்றம் காணப்படும். ஆனால் இன்று அதை உணர வில்லை இது ஒரு தனியார் மருத்துவமனைபோல காட்சி அளிக்கின்றது.

இங்கே அனைத்து விடயங்களும் தனியார் மருத்துவமனை போலக் காணப்படுகின்றது. இதனை பார்க்கும்போது வியப்பாக இருந்தது. எனவே, இதனை செயல்படுத்துகின்ற யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பணிப்பாளர் மற்றும் கண் சிகிச்சைக்கு பொறுப்பான மருத்துவ நிபுணர் மலரவன் ஆகியோருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார். (ஐ)

# சீனாவிலிருந்து மீன் இறக்குமதி செய்வதை நிறுத்த வேண்டும்!

## வடமராட்சி வடக்கு கடற்றொழில் சமாசம் தீர்மானம்

வடமராட்சி, ஒக். 31

சீனாவில் இருந்து இலங்கைக்கு மீன்களை இறக்குமதி செய்வதை நிறுத்த வேண்டும் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சமாசம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.


வடமராட்சி வடக்கு வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சாமசத்தின் பணிமனையில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தலைவர் தம்பிராசா சந்திரதாஸ், வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள அனைத்து சங்கங்களையும் இன்று (நேற்று) நாம் அழைத்திருந்தோம். அதே வேளை சமாச பொதுச் சபை பிரதிநிதிகளையும் அழைத்திருந்தோம். அந்த வகையில் ஒன்றுகூடிய பிரதிநிதிகளால் சீனாவில் இருந்து மீன் இறக்குமதி செய்வதை உடன் நிறுத்துமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எங்கள் மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் சீனாவிலிருந்து மீன்களை இறக்குமதி செய்யும் நடவடிக்கை தொடர்பாக ஆராயப்பட்ட நிலையில் வெளிநாட்டு மீன்களை எமது சந்தையில் விற்பனை செய்து எங்களுடைய சந்தையிலுள்ள மீன்களின் விற்பனைக்கு இடையூறு செய்யவேண்டாம் என்பதை கேட்டுக்கொள்கின்றோம்.

இதேவேளை கடற்றொழில் அமைச்சர்தான் வெளிநாட்டு மீன்களை இறக்குமதியை முன்னெடுப்பதாக கூறப்படுகின்றது. எனவே, இவ்வாறான மீன் இறக்குமதியை செய்ய வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார். (ஐ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஒக்ரோபர் - 31 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - ஐப்பசி 14
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : திருதியை




**மேடம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிரச்னைகள் நீங்கும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்துநீங்கும். சிலர் உங்களை கூறிய குறைகூறினாலும் அதை பெரிதாக்க வேண்டாம்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். உறவினர் நண்பர்களுடன் விரிசல்கள் வரக்கூடும். வாகனத்தில் கவனம் தேவை. யாரிடமும் உணர்ச்சிவசப்பட்டு பேசாதீர்கள்.

**கடகம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். நெடு நாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களைதேடி வருவார். புது முடிவுகள் எடுப்பீர்கள்.

**சிம்மம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடுவாகனத்தை சீர் செய்வீர்கள். உங்கள் பிடிவாதப் போக்கை கொஞ்சம்மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவுக் கிடைக்கும்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக அலைச்சல் டென்ஷன் குறையும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலகிச் சென்ற உறவினர்கள் வலியவந்து பேசுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். யாரையும் நம்பி உறுதிமொழி தர வேண்டாம்.

**விருட்சிகம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**தனுசு**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். அலுவலகத்தில் எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மகரம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். நண்பர்களால் ஆதாயம் பெருகும். செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள்.

**கும்பம்**
அரசு காரியங்கள் சாதகமாக முடியும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பழைய கடனைத்தீர்க்க புது வழி யோசிப்பீர்கள். வாகனங்களை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம்லாபமடைவீர்கள். எதிர்பார்ப்புகள்பூர்த்தியாகும் நாள்.

**மீனம்**
சொத்து பிரச்னைக்கு சுமுக தீர்வு காண்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள்.வெற்றிக்கு வித்திடும் நாள்.

# கேரளாவில் குண்டுவெடிப்பு: தமிழகத்தில் பாதுகாப்பு உயர்வு

சென்னை, ஒக். 31

கேரள மாநிலம் களமச்சேரி குண்டுவெடிப்பைத் தொடர்ந்து கேரள மாநிலத்தை ஒட்டியுள்ள தமிழக எல்லையோர மாவட்டங்களில் கண்காணிப்பை தீவிரப்படுத்த தமிழக காவல்துறைக்கு பிரதி பொலிஸ் பணிப்பாளர் சங்கர் ஜிவால் உத்தரவிட்டுள்ளார்.

கேரள மாநிலம் எர்ணாகுளம் அருகே உள்ள களமசேரியில் நேற்று முன்தினம் தொடர் வெடி விபத்துகள் ஏற்பட்டன. தேவாலய பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். 30 பேர் காயங்களுக்கு உள்ளாகினர்.

இந்தநிலையில், குண்டு வெடிப்பில் தொடர்புடைய குற்றவாளிகள் தமிழகத்தில் ஊடுருவலாம் என்ற அடிப்படையில், கேரள மாநிலத்தை ஒட்டியிருக்கக்கூடிய, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தேனி, கோவை உள்ளிட்ட பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்த உத்தரவிடப்பட்டது.

(ஐ)

# தி. மு. க. ஊழல் அமைச்சர்களுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடக்கும்

## பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைவர்

சென்னை, ஒக். 31

தி. மு. க. ஊழல் அமைச்சர்களுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தப்படும் என பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“1996 - 2001 தி. மு. க. ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த பொன்முடி, 2006 - 2011 திமுக ஆட்சியில் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்த கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், அதே 2006 - 2011 தி. மு. க. ஆட்சியில் பள்ளி கல்வித் துறை அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு ஆகியோர் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்தது தொடர்பாக வெவ்வேறு கால கட்டங்களில் நீதிமன்றங்களில் விசாரணை நடைபெற்றது.

பின்னர், இந்த வழக்குகளில் இருந்து, அமைச்சர்கள், அவர்களின் மனைவி மற்றும் உறவினர்கள் அனைவரையும் நீதிமன்றம் விடுவித்தது. இந்த 3 அமைச்சர்களையும் சொத்து குவிப்பு வழக்கில் இருந்து விடுவித்ததை எதிர்த்து, தமிழக அரசின் லஞ்ச ஒழிப்பு துறை மேல்முறையீடு செய்யவில்லை.

தி. மு. க. அமைச்சர்களுக்கு எதிரான இந்த சொத்து குவிப்பு வழக்குகள் கையாளப்பட்ட விதம் சந்தேகத்துக்கு இடமாக இருப்பதால், நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ், இந்த வழக்குகள் தொடர்பான சீராய்வு மனு விசாரணையை தாமாக முன் வந்து தொடங்கியுள்ளார்.

ஆனால், அதிகார பலத்தில் தமிழக அரசின் விசாரணை அமைப்புகளை முடக்கி, ஊழல் குற்றச்சாட்டுகளில் இருந்து எளிதில் தப்பித்துவிடலாம் என்ற தி. மு. கவின் எண்ணம் நிறைவேறாது. தி. மு. கவின் ஒவ்வொரு ஊழல் அமைச்சர்களுக்கு எதிராக சட்டப் போராட்டம் நடத்தி, அவர்களுக்கு சட்ட ரீதியான தண்டனை கிடைப்பதை தமிழக பா. ஜ. க. நிச்சயம் உறுதி செய்யும்.” என கூறியுள்ளார்.

# தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை முடக்குவதே இலங்கை அரசின் நோக்கம்!

## பா. ம. க. நிறுவுநர் குற்றச்சாட்டு

சென்னை, ஒக். 31

தமிழக மீனவர்களை மீண்டும், மீண்டும் கைது செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை முடக்க வேண்டும் என்பது தான் இலங்கை அரசின் நோக்கமாகும் - என்று பா. ம. க. நிறுவனர் ராமதாஸ் வேதனை தெரிவித்துள்ளார்.

மேலும், "வங்கக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 37 பேரை அவர்களின் 5 படகுகளுடன் சிங்கள கடற்படையினர் கைது செய்து இலங்கை சிறையில் அடைத்துள்ளனர். இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னாரை ஒட்டிய இந்திய பாரம்பரிய மீன்பிடிப்புப் பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சிங்கள கடற்படையினரின் இந்த தொடர் அத்துமீறல் கண்டிக்கத்தக்கது.

தமிழக மீனவர்களை மீண்டும், மீண்டும் கைது செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை முடக்க வேண்டும் என்பது தான் இலங்கை அரசின் நோக்கமாகும். அதன் ஒரு கட்டமாக கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் விடுதலையை தாமதிப்பதற்காக புதிய உத்திகளை இலங்கை அரசு பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.

ஒருபுறம் மீனவர்களை கைது செய்து, அவர்களின் படகுகளை பறிமுதல் செய்தல், இன்னொருபுறம் தமிழக மீனவர்கள் மீது கடல் கொள்ளையர்களைக் கொண்டு தாக்குதல் நடத்துதல் என இருமுனைத் தாக்குதலை இலங்கை நடத்தி வருகிறது.

இதனால், தமிழக மீனவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து வருகின்றனர். இதேநிலை தொடர்ந்தால், இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகபட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்களையும், புதுச்சேரி காரைக்காலையும் சேர்ந்த மீனவர்கள் வாழ்வாதாரங்களை இழந்து உள்ளூர் அகதிகளாக மாற வேண்டிய நிலை ஏற்படும் - எனவே இது விடயத்தில் தமிழக மத்திய அரசுகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றும் கூறியுள்ளார்.

(ஐ)

# தி. மு. க. ஆட்சியிலேயே கச்சதீவு கொடுக்கப்பட்டது

## சசிகலா கூறுகிறார்

சென்னை, ஒக். 31

தி. மு. க. ஆட்சியில்தான் கச்சதீவு கொடுக்கப்பட்டது. அது மீனவர்களுக்கு நல்ல விசயமா. மீனவர்கள் எப்படிப் போனால் என்ன என்ற நினைப்பில்தான் அன்றைக்கே அவர்கள் செய்திருக்க வேண்டும். அவர்களிடம் இன்று மீனவர்களுக்கு உதவியை எதிர்பார்ப்பது தவறு என நினைக்கிறேன் - என்று சசிகலா தெரிவித்துள்ளார்.

‘மறைந்த முதல்வர் ஜெயலலிதா திட்டங்களை நாங்கள் நிறைவேற்றவில்லை தி. மு. க. வகுத்த திட்டங்களைத்தான் நிறைவேற்றுகிறோம்’ என உதயநிதி கூறுகிறார். இது மக்களுக்குத் தெரியும். தி. மு. க. ஆட்சிக்கு வந்து 30 மாதங்கல் ஆகிவிட்டன. என்ன செய்திருக்கிறார்கள் என்பதை மக்களிடம் கேட்டால் அவர்கள் பதில் சொல்வார்கள். எனக்குத் தெரிந்து அவர்கள் சொன்னதை எதுவும் உருப்படியாக செய்யவில்லை” என்றார்.

தேர்தலுக்கு முன்பு அனைவரையும் ஒன்றிணைப்பீர்களா, பழனிசாமியின் வசமிருப்பதுதான் அ. தி. மு. க. என தேர்தல் ஆணையமும் தெரிவிப்பது குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், “சிவில் வழக்கு தீர்ப்பு இன்னும் வரவில்லை. அந்தத் தீர்ப்பு வந்தால்தான் இறுதி முடிவு என தேர்தல் ஆணையமும் சொல்லியுள்ளது. தேர்தல் ஆணையமும் உச்ச நீதிமன்றத்தில் அந்தக் கடிதத்தைதான் கொடுத்திருக்கிறது. தொண்டர்களை தொடர்ந்து சந்திக்கிறேன். தேர்தலும் வருகிறது. விரைவில் சுற்றுப்பயணம் தொடங்குவேன்” என்றார்.

# வெள்ளை வானில் வந்தவர்களால் வடமராட்சி கிழக்கில் கொள்ளை!

## பணம், ஆவணங்களை மிரட்டி எடுத்துச் சென்றனர்

வடமராட்சி, ஒக். 31

**வடமாராட்சி கிழக்கு வத்திராயன் பகுதியில் வெள்ளை வானில் சென்ற சிலர் ஒருவரின் வீட்டுக்குள் புகுந்து அவர்களை அச்சுறுத்தி வீட்டில் இருந்த ஆவணங்கள் மற்றும் பணம் என்பனவற்றை எடுத்துச் சென்றுள்ளனர்.**

இந்த சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிறு இரவு 9:45 மணயளவில் இடம்பெற்றுள்ளது.

ஹையஸ் வாகனத்தில் வந்தவர்கள் பருத்தித்துறை பிரதேச சபையில் பணியாற்றிவரும் ஈஸ்வரன் என்பவரது வீட்டுக்குள் சென்று உங்கள் அடையாள ஆவணங்களை காண்பியுங்கள் என்று தெரிவித்து அவற்றை பார்வையிட்டதுடன் அவர்களது தொலைபேசிகளையும் பறித்துச் சென்றுள்ளனர். அவர்களின் அடையாள அட்டை என்பனவற்றை பார்வையிட்டதுடன் அவர் காணி ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக வைத்திருந்த ஆவணங்கள், சோதிக்கப்பட்டு அந்த பையில் இருந்த ரூபாய் 5 லட்சம் பணம், மற்றும் ஆறரைப் பவுன் தங்க கைகளும் வாகனத்தில் வந்த இனந்தெரியாத நபர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-2)

# வடகீழ் பருவ மழை ஆரம்பம்

வடமராட்சி,ஒக் .31

2023 - 2024 ஆம் ஆண்டுக்கான வடகீழ் பருவக் காற்றுக்கான முதல் சுற்று மழை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் நேற்று திங்கள் அதிகாலை 4 மணியளவில் தொடங்கியுள்ளது.

இந்த மழை தொடர்ச்சியாக நவம்பர் 06 ஆம் திகதிவரை அவ்வப்போது கிடைக்கும் வாய்ப்புள்ளது.

நேற்று பிற்பகலுக்கு பின்னரும் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாக எதிர்பார்க்கப்பட்டது என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

நேற்று திங்கள் முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் வட கிழக்கு திசையில் இருந்து காற்று வீசத் தொடங்கும்.

எனவே நேற்று திங்கள்முதல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் மக்கள் இனிவரும் நாள்களின் எந்நேரத்திலும் மழை கிடைக்கலாம் என்ற எடுகோளைக் கருத்தில் கொண்டு அதற்கான முன்னேற்பாடுகளுடன் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறந்தது என்று அவர் கூறினார். (அ-02)

# 50 கிலோ கஞ்சா சிக்கியது

வடமராட்சி, ஒக். 31

வல்வெட்டித்துறை கடற்கரையில் அநாதரவாக நின்ற படகில் இருந்து 50 கிலோ கஞ்சாவை நேற்று திங்கட்கிழமை அதிகாலை இராணுவமும் பொலிஸாரும் இணைந்து கைப்பற்றினர்.

சந்தேக நபர்களாக எவரும் கைது செய்யப்படவில்லை. வல்வெட்டித்துறை இராணுவத்துக்கு கிடைத்த ரகசிய தகவலை அடுத்து இராணுவத்துடன் பொலிஸாரும் இணைந்து கடல் பகுதியில் தேடுதல் நடத்தி கஞ்சாவை கைப்பற்றினர். (அ)



# பாதாள உலக செயற்பாடுகளை ஒழிப்பதற்கு புதிய திட்டம் தயார்!

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்

கொழும்பு, ஒக். 31

எதிர்வரும் 06 மாதங்களில் ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்தி பாதாள உலகச் செயற்பாடுகளை முற்றாக முடிவுக்குக் கொண்டுவருவதற்கான திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த அவர், கைதி ஒருவர் தெரிவித்தது போன்று மீண்டும் கொழும்பில் தாக்குதல் நடத்தும் திட்டம் எதுவும் இல்லை என விசாரணையில் ஏற்கனவே தெரியவந்துள்ளது.

அண்மையில் அனுராதபுரத்தில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈஸ்டர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை நீதிமன்றத்திற்கு அழைத்து சென்றபோது, பஸ்ஸில் இருந்து ஒரு சிறிய காகித துண்டு வீசப்பட்டது. மீண்டும் கொழும்பைத் தாக்க நாங்கள் தயார் என்று அதில் கூறப்பட்டிருந்தது. அவர் தன் மீதான கவனத்தை ஈர்க்கவே இவ்வாறு செய்துள்ளார். அதில் உண்மை இல்லை என தெரியவந்தது.

இந்த பாதாள உலகக் குற்றச் செயல்கள் குறித்து அதிக அளவில் பேசப்படுகிறது. குறிப்பாக தென் மாகாணத்திலும், மேல் மாகாணத்தில் சில இடங்களிலும் ஆயுதம் ஏந்திய குற்றவாளிகள் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர். இல்லாவிட்டால் துப்பாக்கி ஏந்தியவர்கள் சுட்டுக் கொன்று கொல்கின்றனர். இவை அனைத்தும் வெளிநாட்டில் தலைமறைவாகியுள்ள போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் முக்கிய குற்றவாளிகளால் வழிநடத்தப்படுகின்றன.

இந்த ஆயுதக் குழுக்களையும் இந்த பாதாள உலக செயற்பாடுகளையும் எதிர்வரும் 06 மாதங்களில் முற்றாக நிறுத்துவதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தொழிலதிபர்களை மிரட்டி பணம் பறிப்பவர்களும் உள்ளனர். அவர்களைப் பற்றிய தகவல் தெரிந்தால், பொலிஸாருக்கு அறிவித்து உதவுங்கள்- என்றார். (அ)

# மனைவி அடித்து கொலை; கணவர் தப்பியோட்டம்!

கொழும்பு, ஒக். 31

அயகம , இன்னகந்த பிரதேசத்தை சேர்ந்த கணவரால் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டு உயிரிழந்துள்ளார்.

45 வயதுடைய குறித்த பெண் தாக்குதலுக்கு உள்ளாகி மயங்கிய நிலையில் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கணவன் மனைவிக்கு இடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக கணவனால் குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தற்போது பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார். அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை அயகம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# அரச ஊழியர்கள் நுவரெலியாவில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்!

கொழும்பு, ஒக். 31

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் முன்வைக்கப்படவுள்ள வரவு -செலவுத் திட்டத்தின் ஊடாக 20,000 ரூபா கொடுப்பனவு அல்லது சம்பள அதிகரிப்பை வழங்குமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

இதற்கு ஆதரவாக நேற்று திங்கட்கிழமை நுவரெலியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக அரச ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட னர்.



இதில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி, அலுவலக சேவைகள் மற்றும் மாகாண அரசாங்க உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (அ)

# கணவரைக் காரால் மோதி கொலை செய்த மனைவி கைது!

கொழும்பு, ஒக். 31

மாவனெல்லை பிரதேசத்தில் தனது கணவரை காரினால் மோதி கொலை செய்த குற்றச்சாட்டின்பேரில் மனைவி மற்றும் மனைவியின் சட்டபூர்வமற்ற கணவர் ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் கடந்த 27ஆம் திகதி காரில் மோதி விபத்துக்குள்ளாகி மாவனெல்லை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனை தொடர்ந்து பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த விபத்து திட்டமிடப்பட்ட கொலை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தேகத்தின் பேரில் உயிரிழந்தவரின் மனைவி மற்றும் மனைவியின் சட்டபூர்வமற்ற கணவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவனெல்லை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)




# வெளிநாடுகளின் தடைகளால் அவமானப்படுத்தப்படுகிறோம்

## சரத் வீரசேகர ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஒக். 31

**அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் முன்னாள் ஜனாதிபதிகள், ஒய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் உட்பட இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக விதித்துள்ள பயணத் தடைகள் காரணமாக ஏற்பட்டுள்ள அவமானகரமான நிலை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர ஜனாதிபதிக்கு கடிதமொன்றை எழுதியுள்ளார்.**

25ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்பு படைகளின் பிரதானி சவேந்திரசில்வா உட்பட பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இவர்கள் எவருக்கும் எதிராக உள்நாட்டு வெளிநாட்டு நீதிமன்றங்களில் யுத்த குற்றச்சாட்டுகள் எவையும் சுமத்தப்படவில்லை என சரத் வீரசேகர தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்கான அரசியல் இராணுவத் தலைமைத்துவத்தை வழங்கியவர்களை அவமானப்படுத்துவதற்காக மேற்குலகம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பிரேரணைகளை பயன்படுத்துகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் ஜெனிவா சாசனம் மற்றும் யுத்தம் குறித்து மனித உரிமை பேரவைக்கு தெளிவுபடுத்த தவறிவிட்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில அதிகாரிகள் அமைதிப்படை நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. ஆதாரமற்ற யுத்தகுற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர்களின் நியமனங்கள் தாமதிக்கப்பட்டன அல்லது நிராகரிக்கப்பட்டன எனவும் சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார். (அ)



# அரசுக்கு எதிராக வவுனியாவில் நேற்று கவனவீர்ப்பு போராட்டம்

வவுனியா, ஒக். 31

வவுனியா தபால் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அரசாங்கத்திற்கு எதிராக கனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

வவுனியா பிரதான தபால் நிலையம் முன்பாக அஞ்சல் தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று மதியம் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

20 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரியும், அரசாங்கத்தின் செயற்பாட்டை கண்டித்தும் நாடு பூராகவும் இடம்பெற்ற தொழிற்சங்க போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து குறித்த போராட்டம் இடம்பெற்றது. (அ)




# பூநகரியில் சரவணப்பொய்கை நுண்கலைக்கூடம் திறந்துவைப்பு

கிளிநொச்சி, ஒக். 31

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் சோபாலபிட்டியில் சரவணப்பொய்கை நுண்கலைக் கூடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச மாணவர்களின் நலன்கருதி பூநகரிச்சேர்ந்த புலம்பெயர் உறவுகளால் இவ் இலவச நுண்கலைக் கூடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் குறித்த நுண்கலைக் கூடத்தை வடக்கு மாகாண ஒய்வுப்பெற்ற மாகாண கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் பிரதம விருந்தினராகவும், பூநகரி பிரதேச செயலாளர் த. அகிலன், யாழ் பல்கலைகழக ஆங்கில மொழி கற்பித்தல் துறை விரிவுரையாளர் கலாநிதி க. ஸ்ரீகணேசன்,பூநகரி வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி சி.ஆனந்தசிறி பூநகரி பிரதேச சபை செயலாளர், தயாபரன் ஆகியோர் விருந்தினர்களாகவும் கலந்துகொண்டு திறந்து வைத்துள்ளனர். (அ)

# நாளுக்கு நாள் மாதத்துக்கு மாதம் என மக்களிடம் வரி அறவிடப்படுகின்றது!

## ஜீ.எல். பீரிஸ் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 31

நாளுக்கு நாள் மாதத்திற்கு மாதம் என மக்களிடம் வரி அறவிடப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

இதனால் மக்களால் வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாத நிலை தற்போது உருவாகி இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டியது அத்தியாவசியம் என்றும் 2048 ஆம் ஆண்டில் டிஜிற்றல் பொருளாதாரம் உருவாக்கப்படும் என்று பேசுவதில் எந்த பிரயோஜனமும் இல்லை என்றும் பீரிஸ் கூறியுள்ளார்.

அடுத்த வேளை உணவுக்காக போராடும் மக்களிடம் 25 வருடங்களின் பின்னர் நடக்க போகும் விடயங்கள் குறித்து பேசுவதில் அர்த்தம் இருக்கின்றதா என்றும் ஜீ.எல். பீரிஸ் கேள்வியெழுப்பினார். (அ)

# பட்ஜெட்டில் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வருமான வரிகள்!

## விஜித ஹேரத் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 31

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் முழுக்க முழுக்க சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

2024 ஜனவரி முதல் சொத்து வரி மற்றும் புதிய வரிகளை விதிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வரவு செலவுத் திட்டத்திற்கான பொது முன்மொழிவுகளை கோரி நிதி அமைச்சின் செயலாளர் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடுவது வழமை என்றாலும் இவ்வருடம் அவ்வாறான நடைமுறை பின்பற்றப்படவில்லை என விஜித ஹேரத் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணையை வெளியிட விடுக்கப்பட்ட நிபந்தனைக்குப் பிறகு மின் கட்டணம் உயர்த்தப்பட்டது போல் 2024 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் ஐ.எம்.எப். முன்மொழிவுகளின் அடிப்படையில் இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரச வருமானத்தை தற்போதைய 9 வீதத்தில் இருந்து 12 வீதமாக அதிகரிப்பதற்காக 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக புதிய வரிகளை அறிமுகப்படுத்துமாறு சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக விஜித ஹேரத் கூறினார்.

அதன்படி 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வருமான வரிக் கோப்புகளும் அடுத்த ஆண்டு ஜனவரி முதல் திறக்கப்படும் என்றும் விஜித ஹேரத் தெரிவித்தார். (அ)

# முன்னாள் டி.ஐ.ஜி செனவிரத்னவின் பிணை விண்ணப்பம் நிராகரிப்பு!



கொழும்பு, ஒக். 31

மதுபோதையில் வாகனம் செலுத்தி இரண்டு வாகனங்களுக்கு சேதம் விளைவித்த குற்றத்திற்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்னவின் பிணை விண்ணப்பம் கல்கிசை மேலதிக நீதவான் சஞ்சய எல். எம்.விஜேசிங்கவினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

விசேட பத்திரம் ஊடாக பிணை விண்ணப்பத்தை அவர் சமர்ப்பித்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.20 மணியளவில் வெள்ளவத்தை முஹூது மாவத்தையில் உள்ள ஹோட்டல் ஒன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு வாகனங்களுக்கு சேதம் விளைவித்த ஒய்வு பெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் வெள்ளவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

விபத்தின்போது அவர் மது போதையில் இருந்ததாக பரிசோதனையில் தெரியவந்தது.

# உரங்களுக்கு கட்டுப்பாட்டு விலை

கொழும்பு, ஒக். 31

உரங்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

விவசாயிகளுக்கு அதிக விலைக்கு உரங்கள் விற்பனை செய்யப்படுவதாக விவசாய அமைச்சுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இருப்பினும், கட்டுப்பாட்டு விலை குறித்து இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

உர விற்பனை தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வுகள் மற்றும் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக உரிய விசாரணை நடத்தப்பட்டதன் பின்னரே இது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, நவீன விவசாய தொழில்நுட்ப செயலகத்தை நிறுவுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ)

# தட்டுப்பாடற்ற மணல் விநியோகத்தை வடக்கில் உறுதிப்படுத்துதல் அவசியம்!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஒக். 31**

**“வட மாகாணத்தின் கட்டுமானப் பணிகளுக்கு தேவையான மணல் நியாயமான விலையிலும் தட்டுப்பாடின்றியும் கிடைப்பதை உறுதிப்படுத்தவேண்டும்” என கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

மணல் அகழ்வு மற்றும் மணல் விநியோகம் தொடர்பாக யாழ் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும், அத்துடன் மணல் அகழ்வு அனுமதிகள் வழங்கப்பட்டு தட்டுப்பாடின்றி மணல் கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அடையாளப்படுத்தப்பட்ட மணல் திட்டுக்களில் மணல் அகழ்வை மேற்கொள்வதற்கான ஒத்துழைப்புக்களை அனைத்து திணைக்களங்களும் வழங்க வேண்டும் - என்றார். (அ)



# பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்த காட்டுயானைகள் உயிருடன் மீட்பு

கொழும்பு, ஒக். 31

ரிட்டிகல பகுதிலுள்ள விவசாய கிணறொன்றுக்குள் விழுந்த 4 காட்டுயானைகள் பல மணிநேர முயற்சியின் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளன.

ரிட்டிகல, கனேவல்பொல, மொரகொட மற்றும் அல கொல்லேவ வனஜீவராசிகள் காரியாலங்களின் அதிகாரிகள் இணைந்து குறித்த யானைகளை மீட்டுள்ளனர்.

இரண்டு தாய் யானைகளும், இரண்டு குட்டிகளுமே இவ்வாறு கிணற்றில் விழுந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட 4 யானைகளும் பின்னர் கும்புக்வெவ வனப்பகுதியில் விடுவிக்கப்பட்டதாக வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



உணவு தேடி ஊருக்குள் பிரவேசித்த யானைகளே இவ்வாறு பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

# இலங்கையில் உயிரிழப்போர் எண்ணிக்கையில் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக். 31

நாட்டில் உயிரிழப்போரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளிலேயே குறித்த தகவல் வெளியாகியுள்ளதாக, மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2012 ஜூலை முதல் 2013 ஜூன் வரை இலங்கையில் பதிவான இறப்புகளின் எண்ணிக்கை 125,626 ஆக பதிவாகியுள்ள போதிலும், 2022 ஜூன் முதல் 2023 ஜூன் வரை இலங்கையில் நிகழ்ந்த இறப்புகளின் எண்ணிக்கை 190,600 என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய 2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் இலங்கையின் சராசரி வருடாந்த சனத்தொகை வளர்ச்சி குறைந்துள்ளதாகவும் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் கூற்றுப்படி,



பிறப்பு எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து, இறப்பு படிப்படியாக அதிகரித்து வருகிறது.

எவ்வாறாயினும், இந்த மரணங்கள் படிப்படியாக அதிகரித்து வருவதற்கான காரணம் கண்டறியப்படவில்லை. மேலும் இந்த நாட்டில் கொவிட் பரவியதன் பின்னர் இந்த நிலைமை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொவிட் தடுப்பூசி குறித்து பல்வேறு தரப்பினரிடையே பல்வேறு கருத்துகள் இருந்தாலும், இது தொடர்பாக இதுவரை குறிப்பிட்ட தகவல்கள் எதுவும் தெரிவிக்கப்பட வில்லை.

இதேவேளை, உலகில் சராசரியாக வருடாந்த இறப்பு வீதம் 15 வீதத்திலிருந்து 45 வீதத்திற்கு இடையில் ஒரு வீதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# கிழக்கு மாகாணத்தில் நிறுவப்பட்ட மிக உயரமான பாலமுருகன் சிலை!



மட்டக்களப்பு, ஒக். 31

மட்டக்களப்பு - தாந்தாமலை 40 வட்டையடியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலமுருகன் சிலைக்கு நேற்று முன்தினம் குடமுழுக்கு இடம்பெற்றது.

கிழக்கு இலங்கையின் வரலாற்று சிறப்பு மிக்க தாந்தாமலை முருகன் ஆலயத்திற்கு செல்லும் வழியில் 40 வட்டை சந்தியில் இந்த பாலமுருகன் சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சுமார் 35 அடி உயரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள பால முருகன் சிலை கிழக்கு இலங்கையில் மிக உயரமான சிலைகளில் ஒன்றாக திகழ்கின்றது.

தாந்தாமலை முருகன் ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த குருக்கள் தலைமையில் சிலைக்கு குடமுழுக்கு வெகுவிமர்சையாக இடம்பெற்றது.

இதன்போது விசேட பூசைகள் நடைபெற்று, முச்சந்தி விநாயகருக்கும் குடமுழுக்கு செய்யப்பட்டது.

# தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் சபையின் உயர்மட்ட நிர்வாகத்தில் விரைவில் மாற்றம்

கொழும்பு, ஒக். 31

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர் உள்ளிட்ட பணிப்பாளர் சபையில் மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த மாற்றம் எதிர்வரும் சில தினங்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்தமை, உரிய தரத்தைக் கொண்டிராத மருந்துகளின் பயன்பாடு, தரவுகள் அழிக்கப்பட்டமை உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பில் கடந்த காலங்களில் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் மீது பல தரப்பினரும் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

சுகாதாரத் துறையில் இவ்வாறான நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருந்தமையின் பின்னணியிலேயே, டொக்டர் ரமேஷ் பத்திரனவை புதிய சுகாதார அமைச்சராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்திருந்தார்.

சுகாதார அமைச்சராக செயற்பட்ட கெஹெலிய ரம்புக்வெல்ல சுற்றாடல் அமைச்சராக நியமிக்கப்பட்டு இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. (அ)

# சிறுவர் இல்லமொன்றில் இருந்து ஐந்து சிறுமிகள் தப்பியோட்டம்!

கொழும்பு, ஒக். 31

சிறுவர் இல்லமொன்றில் தங்க வைக்கப்பட்டிருந்த ஐந்து சிறுமிகள் தப்பிச் சென்றுள்ளதாக மெட்டியகொட பொலிஸார் தெரிவித்தனர்.

ஐந்து சிறுமிகளும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தப்பிச் சென்றுள்ளதாகவும் மெட்டியகொட பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தப்பியோடிய 17, 14 மற்றும் 13 வயதுடைய சிறுமிகள் படபொல, கொழும்பு, ஹிக்கடுவ, எல்பிட்டிய மற்றும் நெலுவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பியோடிய சிறுமிகள் குறித்த எந்த தகவலும் இதுவரை வெளியாகவில்லை. (அ)

# சுமார் 70 மில்லியன் ரூபாய் பெறுமதியான அரிசி மூடைகள் களஞ்சியங்களில் மாயம்!

குருநாகல் பிரதேசத்தில் உள்ள 2 அரச அரிசி களஞ்சிய சாலைகளில் இருந்து சுமார் 70 மில்லியன் ரூபாய் பெறுமதியான அரிசி மூட்டைகள் காணமற் போயுள்ளதாக அரிசி சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்” 7,00,000 கிலோ அரிசி மூட்டைகளே இவ்வாறு காணாமற் போயுள்ளன. இச் சம்பவம் தொடர்பில் இரண்டு அதிகாரிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர். காணாமல் போன அரிசி முட்டைகளின் பெறுமதி சுமார் 65 - 70 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது - என்றார். (அ)

# கட்டளையை மீறி பயணித்த ஓட்டோ மீது பொலிஸார் சூடு

கொழும்பு, ஒக். 31

பியகம - யட்டவத்த வீதி பகுதியில் கட்டளையை மீறி பயணித்த ஓட்டோ மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

வீதித்தடையை ஏற்படுத்தி முச்சக்கர வண்டியை நிறுத்துமாறு பொலிஸார் கட்டளையிட்டுள்ளனர்.

இருப்பினும், கட்டளையை மீறி பயணித்த ஓட்டோவை துரத்திச்சென்ற பொலிஸார், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது அதில் பயணம் செய்த சந்தேகநபர்கள் முச்சக்கர வண்டியைக் கைவிட்டு தப்பிச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். ஓட்டோ பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந் தேகநபர்களைத் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# மலையக ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, ஒக். 31

மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டதாக ரயில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதுளை ரயில் நிலையத்திலிருந்து நேற்று காலை 10.05 மணிக்கு கொழும்பு - கோட்டை நோக்கி புறப்பட்ட ரயில் 11.45 அளவில் பண்டாரவளை - கினிகம மற்றும் ஹீல்ஓயா ஆகிய தொடருந்து நிலையங்களுக்கு இடையில் தடம் புரண்டது.

இதன்காரணமாக, மலையகத்துக்கான ரயில் சேவை பாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

குறித்த ரயிலை வழித்தட மேற்றும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# மட்டக்களப்பு பொலிஸ் என் மீது பொய் வழக்கு!

## சமூக செயற்பாட்டாளர் கௌரி குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஒக். 31

**மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளாத என்னை, கலந்துகொண்டதாக பொய்யான ஆதாரங்களை உருவாக்கிக் கொண்டு எனக்கெதிராக வழக்கு தாக்கல் செய்த பொலிஸார் நீதித்துறையை தவறான பாதைக்கு கொண்டு செல்லுகின்ற படு பயங்கரமான நிலையே உள்ளது. எனவே, பொலிஸாரின் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தவேண்டும் என பாதிக்கப்பட்ட சமூக செயற்பாட்டளரான கௌரி கோரிக்கை விடுத்துள்ளனார்.**



மட்டு. மாநகரசபை முன் னாள் உறுப்பினரும் சமூக செயற்பாட்டளரான கௌரி ஊட கங்களுக்கு கருத்து தெரி விக்கையில் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க செங்கலடி பாடசாலைக்கு கடந்த 8 ஆம் திகதி வருகைதந் தார். அப்போது மட்டு மேய்ச் சல்தரை மயிலத்தமடு மாத வனை பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதிக்கு எதிர்ப்பு தெரி வித்து மக்களின் ஆர்ப்பாட்டம் கொம்மாந்துறை பகுதியில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பலரது வீடுகளுக்கு சென்று பொலிஸார் வாக்கு மூலங்களை பெற்றுவருகின்றனர். இந்த நிலையில் அந்த ஆர்ப்பாட்டத் தில் நான் கலந்துகொண்டதா கவும் தங்களிடம் அதற்கான ஆதாரம் இருப்பதாகவும் வாக்கு மூலம் ஒன்றை பெற வேண்டும் என சனிக்கிழமை எனது வீடு தேடிவந்த பொலிஸ் உத்தியோகத்தர் தெரிவித்தார்.

அதற்கு நான் வாக்கு மூலம் தரமுடியும். ஆனால், நான் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அன்றை தினம் நான் வீட்டில் இருந்த மைக்கான ஆதாரத்தை உறுதிப் படுத்தியிருந்தேன். அதனை வாக்குமூலத்தில் பதிவு செய் தால் நான் அதில் கையொப்பம் வைப்பேன். அதேவேளை, நீதிமன்ற பிணை முறிப்பத்தி ரத்தில் கையெழுத்து இடமாட் டேன் என தெரிவித்தபோது அதற்கு பொலிஸார் உடன் பட்டநிலையில் வாக்கு மூலத்தை அளித்து அதில் எனது கையொப்பம் வைத் தேன். அதேவேளை, நீதிமன்ற பிணை முறிப்பத்திரத்தில் கையெழுத்து இடவில்லை.

பொலிஸாரின் செயற்பாடு பெரும் அச்சத்தை ஏற்படுத்தி யுள்ளதுடன் மட்டக்களப்பில் ஒரு பயங்கரமான சூழ்நிலை ஏற்படுத்தியுள்ளது. நீதி துறை யும் பொலிஸாரும் தங்களது கடமையை சரியாக செய்ய தவறியுள்ளனர்.

எனவே, ஒட்டுமொத்த நீதித்துறையும் தவறான ஒரு பாதையில் சென்றுக்கொண்டி ருக்கின்றது. இல்லாத ஒரு விடயத்தை உருவாக்குகின்றது. இதனால் நான் மிகவும் பாதிக் கப்பட்டுள்ளேன். எனவே, இதற்கு சம்பந்தப்பட்ட அதி காரிகள் ஜனதிபதி உடன் கலந் துரையாடி நடவடிக்கை எடுக் குமாறு கோரிக்கை விடுக் கின்றேன் - என்றார். (அ)

# தேசிய மட்ட தமிழ்மொழி தினப் போட்டியில் காரைதீவு மகோற்ஷபிக்கு தங்கப் பதக்கம்

காரைதீவு, ஒக். 31

2023 இற்கான தேசிய மட்ட தமிழ்மொழி தினப் போட்டியில் காரைதீவு இ.கி.மி பெண் கள்வித்தியாலய மாணவி செல்வி ராஜேந்திர குமார் மகோற்ஷபி நான்காம் பிரிவு சிறுகதை ஆக்கத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசியமட் டத்தில் தங்கப் பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார். (அ)



# பெரும்போக வேளாண்மை கிண்ணியாவில் ஆரம்பம்!

மட்டக்களப்பு, ஒக். 31

தம்பலகமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மயில் தீவு, ஆறாம்வாய்க்கால் முதலான பகுதிகளில் வேளாண்மை செய்கைக்கான நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

உழுதல்,விதைத்தல், வரம்பு சீராக்கல் முதலான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் சுமார் 2000 இற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப் பரப்பில் வேளாண்மைச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எனினும்,இப்பெரும் போகத்துக்கான உரம்,பசளை இன்னும் வழங்கப்படவில்லை என்று விவசாயிகள் தெரிவிக் கின்றனர்.

இருந்தபோதிலும் கமநல சேவைகள் நிலையத்தின் மூலம் அவற்றை வழங்குவதாக கூறி யுள்ளனர்.

இப்பசளைகளை உரிய காலத்துக்குள் வழங்குமாறு விவசாயிகள் கேட்டுள்ளனர்.

அவ்வாறு விழங்காவிட் டால் கடந்த காலங்களில் நோய் ஏற்பட்டதைப் போன்று இம்முறையும் நட்டம் ஏற்படும் என விவசாயிகள் தெரிவிக்கின் றனர்.

உரிய காலத்துக்குள் பசளையைத் தந்து எங்களுடைய விவசாயத்தை கடந்த காலங்களைப் போன்று பாதிப் புகள் ஏற்படாமல் இம்முறை யாவது விளைச்சல் கிடைப்ப தற்கு உதவி செய்யுமாறு அவர்கள் கோருகின்றனர். (அ)



# பிரதேச செயலகத்தில் மரநடுகை

அம்பாறை, ஒக். 31

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுமக்கள் சேவை பணியகத்தின் இரண்டாவது வருட பூர்த்தியை முன்னிட்டு நல்லினக்க மர நடுகை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

பிரதேச செயலக மக்கள் பணியகத்தின் பூங்கா வளாகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எஹியா றாஸீத் பிரதம அதியாக கலந்து கொண்டார். முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எச் . ஜெய்னுதீன், ஓய்வு நிலை அதிபர் பரீட் , பிரதேச செயலக உத்தியோகத்தர்களான ஐ.எல்.காலித், எஸ்.றிஸ்லி, உள்ளிட்ட உத்தியோகத்தர்களும் பங்கேற் றனர். (அ)

# முன்பள்ளிக்கு கணனி வழங்கல்

அம்பாறை, ஒக். 31

சாய்ந்தமருது 'லீத்வே' பாலர் பாடசாலைக்கு மடி கணணி வழங்கப்பட்டது.

பாடசாலை அதிபரின் வேண்டுகளுக்குகிணங்க மாணவர்களின் நன்மை கருதி கல்முனை மாநகர முன் னாள் முதல்வரும், மெற்றோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளரும் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தனது சொந்த நிதியுதவி மூலம் இக் கணினியினை அதிபரிடம் வழங்கி னார்.

இதேவேளை, இப்பிராந்தியத்தில் காணப்படும் அதிக மான முன்பள்ளி பாலர் பாடசாலைகளுக்கும் அண்மை யில் சிராஸ் மீரா சாஹீப் நேரடியாகச் சென்று கற்றல் உப கரணங்களும் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. (அ)





# பனை விதைகள் நடும் திட்டம் திருக்கோவிலில் முன்னெடுப்பு

காரைதீவு, ஒக். 31

திருக்கோவில் பிரதேசத்தில் பனை விதைகள் நடும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த வேலைத்திட்டமானது திருக்கோவில் பிர தேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் முன்னெ டுக்கப்பட்டது.

இத் திட்டமானது பனை சார்ந்த உற்பத்திகளை மேற் கொள்ள தேவையான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ள பனைசார்ந்த உற்பத்தி கிராமங்களை உருவாக் கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த வேலைத்திட்டத்திற்கான ஆரம்ப கட்ட நிகழ்வு தம்பட்டை 01 ,02 பகுதிகளின் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் க. சதிசேகரன் , பனை அபிவி ருத்தி சபையின் மட்டு அம்பாறை மாவட்ட முகாமை யாளர் ரி.விஜயன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கதிரவெளி பால்சேனை தமிழ் ம.வி. மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

மட்டக்களப்பு, ஒக். 31

கல்குடா கல்வி வலய கதிர வெளி பால்சேனை தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் அதிகஷ்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் புத் தகப்பை வழங்கும் நிகழ்வு பாடசாலையின் பிரதி அதிபர் நா. தயாகரன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

ஏழை மாணவர்களின் கல் விக்கு தொடர்ந்தும் உதவிக் கரம் நீட்டி வரும் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர் களான லோ. கஜரூபன், சி.காந்தன் ஆகி யோர் கலந்து கொண்டு மாண வர்களுக்கு 5000 ரூபாய் பெறு மதியான கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்த கப்பை என்ப னவற்றை வழங்கினர். (அ)





# இந்தியா பயங்கரவாதத்துக்கு ஒருபோதுமே ஆதரவளிக்காது

## வாக்கெடுப்பிலிருந்து விலகியமைக்கு விளக்கம்

புதுடில்லி, ஒக். 31

இந்தியாவும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் , இந்தியா ஒருபோதும் பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்காது என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அவசர அமர்வின் போது காஸா பகுதியில் பொதுமக்கள் மீதான இஸ்ரேலிய தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு வாக்களிப்பதில் இருந்து இந்தியா விலகியதால், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் இந்தியாவின் நிலைப்பாட்டை இவ்வாறு வலியுறுத்தினார்.

ஹமாஸ் போராளிகளை இலக்காகக் கொண்ட மனிதாபிமான போர்நிறுத்தம் மற்றும் காஸாவில் உள்ள பலஸ்தீனியர்களை காஸா பகுதியில் இஸ்ரேலிய தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பதற்குமே ஐக்கிய நாடுகள் சபையின் அவசர அமர்வு முன்னெடுக்கப்பட்டது.

அமெரிக்கா, கனடா உட்பட பல நாடுகள் அதற்கு எதிராக வாக்களித்தன.

ஜோர்தான் முன்வைத்த பிரேரணைக்கு வாக்களிப்பதை இந்தியா உட்பட பல நாடுகள் புறக்கணித்த நிலை யில் இது தொடர்பாக இந்திய அரசாங்கம் பல விமர்சனங்களை சந்தித்து வருகிறது.

இந்நிலையில், இந்தியாவும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால், இந்தியா எந்த வகையிலும் பயங்கரவாதத்தை ஆதரிக்காது என இந்திய வெளியுறவு அமைச்சர் விளக்கினார்.

# ஆந்திர பிரதேசத்தில் 2 ரயில்கள் மோதின!

## பத்து பேர் உயிரிழப்பு



புதுடில்லி, ஒக். 31

இந்தியாவின் ஆந்திர பிரதேசத்தில் இரண்டு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் சுமார் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 27 பேர் காயமடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விசாகபட்டினத்தில் இருந்து பலாசா நோக்கி பயணித்த விசேட பயணிகள் ரயில் மற்றும் விசாகபட்டினத்தில் இருந்து ஒடிசாவின் ராயகடா நோக்கி பயணித்த அதிவேக இரயில் ஆகியன இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

அதிவேக ரயில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், மறுபுறம் பயணித்த ரயில் அதனுடன் மோதியுள்ளது.

சமிக்ஞை கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

குறித்த விபத்தில் சிக்குண்ட மக்களை மீட்பதற்கு பாரிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டி இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சில மாதங்களுக்கு முன்னதாக இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் மூன்று ரயில்கள் மோதி விபத்துக்குள்ளானது. (அ)

# காஸாவுக்கான உணவு போதுமானதாக இல்லை

## உலக உணவுத் திட்டம் தெரிவிப்பு



ஜெனிவா, ஒக். 31

**காஸா பகுதிக்கான உணவுப் பொருட்கள் போதுமானதாக இல்லை என உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.**

**இந்த நிலையில், உதவிகளை ஏற்றிச் செல்லும் மேலும் 40 கொள்கலன்கள் காஸா பகுதிக்குள் பிரவேசிக்க உள்ளதாக குறிப்பிட்டுள்ளது.**

இதன்படி, காஸா பகுதியில் உள்ள ஒரு மில்லியன் மக்களுக்கு உணவு மற்றும் தண்ணீர் வழங்க சுமார் 40 கொள்கலன்களில் உதவி தேவைப்படுவதாக தெரிவித்துள்ளது.

மேலும், காஸாவில் உள்ள 2 மில்லியன் மக்களுக்கு உணவை வழங்குவதற்கு நாளொன்றுக்கு சுமார் 100 கொள்கலன்கள் தேவைப்படுவதாக உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனிடையே, ஹமாஸ் அமைப்பு தம்மிடமுள்ள பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு மற்றுமொரு முன்மொழிவை முன்வைத்துள்ளது.

இதன்படி, இஸ்ரேலின் காவலில் உள்ள ஹமாஸ் கைதிகளுக்கு ஏற்ப பயணயக்கைதிகளை மாற்றுவதற்கு தயாராக இருப்பதாக ஹமாஸ் தெரிவித்துள்ளது.

இருப்பினும், இஸ்ரேல் இதுவரை பதில் அளிக்கவில்லை என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, இஸ்ரேல் - பலஸ்தீன மோதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 10,000 ஐ அண்மித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 8,000 பேர் காஸா பிரஜைகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# உக்கிரமடைந்து வருகிறது இஸ்ரேல் - ஹமாஸ் போர்!

## பலி எண்ணிக்கை 9 ஆயிரமாக அதிகரிப்பு



ஜெருசலேம், ஒக். 31

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9 ஆயிரத்தை கடந்தது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் நடத்திய தாக்குதலில் இதுவரை 1,405 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பலஸ்தீனத்தின் காசா முனை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 7 ஆயிரத்து 703 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதேபோல், பலஸ்தீனத்தின் மேற்குகரை பகுதியில் நடந்த மோதலில் இதுவரை 109 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன் மூலம் இஸ்ரேல் - ஹமாஸ் போராளிகள் இடையேயான போரில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 9 ஆயிரத்து 217 ஆக அதிகரித்துள்ளது. (அ)

### அரசுக்கு எதிராக வன்முறை போராட்டம்

# பங்களாதேஷ் எதிர்க்கட்சி தலைவர் கைது



டாக்கா, ஒக். 31

பங்களாதேஷ் தலைநகரில் அரசாங்கத்துக்கு எதிரான வன்முறைப் போராட்டங்களை அடுத்து அந்நாட்டின் எதிர்க்கட்சித் தலைவரும் அவரது கட்சி உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சியின் பொதுச் செயலாளர் மிர்சா பக்ருல் இஸ்லாம் ஆலம்கிரும் ஒருவர் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பிரதமர் ஷேக் ஹசீனாவின் ராஜினாமாவுக்கு அழைப்பு விடுத்து பல்லாயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் வார இறுதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஏற்பட்ட வன்முறையை அடுத்து ஒரு பொலிஸ் அதிகாரியம் ஒரு போராட்டக்காரரும் உயிரிழந்ததாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் பங்களாதேஷின் தலைமை நீதிபதியின் வீட்டில் தாக்குதல் நடத்திய தாகக் கூறப்படும் குற்றத்திற்காக எதிர்க்கட்சித் தலைவர் கைது செய்யப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (அ)



# “நான் தவறு செய்துவிட்டேன்”

## மன்னிப்பு கேட்ட இஸ்ரேல் பிரதமர்

டெல் அவிவ், ஒக். 31

கடந்த ஏழாம் திகதி ஹமாஸ் அமைப்பினர் மேற்கொண்ட தாக்குதலைத் தடுக்கத் தவறியதற்காக பாதுகாப்புப் படைகளைக் குற்றம் சாட்டியமைக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு மன்னிப்பு கோரியுள்ளார்.

“நான் தவறு செய்துவிட்டேன். நான் கூறிய விடயங்களைச் சொல்லியிருக்கக்கூடாது, அதற்காக நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்” என்று பெஞ்சமின் நெத்தன்யாகு ஓ தளத்தின் இடுகை ஒன்றில் கூறியுள்ளார்.

“நான் அனைத்து பாதுகாப்பு சேவைகளின் தலைவர்களுக்கும் முழு ஆதரவை வழங்குகிறேன். தலைமைத் தளபதி மற்றும் தளபதிகள் மற்றும் வீரர்களுக்கு பலத்தை வழங்குகின்றேன், அவர்கள் முன்னணியில் இருந்து எங்களுக்காக போராடுகிறார்கள்” என இஸ்ரேலிய பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ஹமாஸின் ”போர் நோக்கங்கள்” பற்றிய எந்த எச்சரிக்கையும் தனக்கு எந்த கட்டத்திலும் கிடைக்கவில்லை என்று எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார்.

எனினும், அவரது கருத்துகள் கடுமையான விமர்சனங்களை ஏற்படுத்தியதை அடுத்து அவை நீக்கப்பட்டன.

பல பாதுகாப்புத் தலைவர்களும் பாரிய தோல்விக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால், பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு அதற்கான எந்தப் பழியையும் ஏற்கவில்லை.

இது குறித்து இஸ்ரேல் இராணுவத்தின் செய்தி தொடர்பாளர் டேனியல் ஹகாரி கருத்து வெளியிடுகையில்-

அந்த கேள்விக்கு நான் பதிலளிக்கமாட்டேன். நாங்கள் இப்போது ஒரு போரில் இருக்கிறோம், அதில் கவனம் செலுத்துகிறோம்.

தேசிய பாதுகாப்புப் பேரவை மற்றும் ஷின் பெட்டில் உள்ள நாங்கள் உண்மையை முழுமையாக ஆராய்ந்து அனைத்தையும் பொதுமக்களுக்கு வழங்குவோம். இப்போது நாங்கள் போரிடுகிறோம், போரில் கவனம் செலுத்துகிறோம். - என்றார்.

இந்நிலையில், பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகளை குற்றம் சாட்டிய பிரதமர் “சிவப்புக் கோட்டைத் தாண்டிவிட்டார்” என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

“ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக வீரத்துடன் போராடும்போது, அவர் அவர்களை ஆதரிப்பதற்கு பதிலாக அவர்களை குற்றம் சாட்ட முயற்சிக்கிறார்.

பொறுப்பைத் தவிர்ப்பதற்கும், இதுபோன்ற முயற்சிகள் இஸ்ரேலின் எதிரிகளுடன் போரிடும்போது வீரர்களை பலவீனப்படுத்துகிறது.” என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# எம்.பிக்களுக்கான காப்புறுதி ஒரு மில்லியனாக அதிகரிப்பு!




**கொழும்பு, ஒக்.31**

**பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு அடுத்த வருடம் முதல் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான காப்புறுதித் திட்டம் அமுல்படுத்தப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார்.**

வருடாந்த வரவு - செலவுத் திட்டத்தின் ஒதுக்கீடுகளுடன் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் இந்த திட்டத்தைச் செயற்படுத்துகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் வயது வரம்பில் ஏற்பட்ட மாற்றம், சமூக பாதுகாப்பு வரி திருத்தங்கள் காரணமாக வரித் தொகையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக அறவிடப்படும் மதிப்பில் ஏற்பட்ட மாற்றம் என்பன காரணமாகவே இவ்வாறு அதிகரிக்கப்படுவதாகவும் பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ)

# மீனவரின் சடலம் மீட்பு

கொழும்பு, ஒக். 31

தொடுவாவ பிரதேசத்தில் கடலில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இரண்டு மீனவர்களில் ஒரு மீனவர் காணாமல் போனதையடுத்து அவரது சடலம் நேற்று அம்பகடவில கரையோரத்தில் கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் மஹவெவ பிரதேச மட்டகொட்டுவ பகுதியைச் சேர்ந்த ஜோசப் அலோசியஸ் (வயது-65) என்பவராவார்.

மீனவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மீன்பிடி தொழிலிலுக்காக கடலுக்குச் சென்றிருந்தபோது படகு கவிழ்ந்ததில் இருவரும் கடலில் வீழ்ந்துள்ளனர்.

இருவரும் தங்களது உயிரை காப்பாற்ற கடலில் நீந்திய நிலையில் ஒரு மீனவர் மற்றுமொரு மீன்பிடிப் படகினால் காப்பாற்றப்பட்டதோடு மற்றைய மீனவர் கடலில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்தார்.

இந்நிலையில் அவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ)

# 1500 குடும்பநல உத்தியோகத்தர்களை பணிக்கு அமர்த்துவதற்கு தீர்மானம்!

கொழும்பு, ஒக். 31

உடனடியாக சுமார் 1500 குடும்பநல சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்களை பணிக்கு அமர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேற்கண்டவாறு கூறினார்.

நேர்முகத் தேர்வுகளில் சித்தியடைந்து மூன்று வருட காலமாக வேலைவாய்ப்புக்காக எதிர்ப்பார்ப்புடன் இருக்கும் குடும்பநல சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்கள் குழு ஒன்று இப்பணிக்கு தெரிவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# நிர்வாணப்படங்களை இணையத்தில் வெளியிடுவதாக அச்சுறுத்தி சிறுமியிடம் பணம் கோரிய சிப்பாய் கைது!

கொழும்பு, ஒக். 31

முகநூல் மூலமாக அறிமுகமான 16 வயதுப் பாடசாலை மாணவியுடன் காதல் விவகாரத்தில் ஈடுபட்டு காதலி மற்றும் அவரது 13 வயது சகோதரியின் நிர்வாணப்படங்களை வட்ஸப் மூலம் தனது தொலைபேசியில் பதிவு செய்து அதனை இணையத்தளத்தில் வெளியிடுவதாக அச்சுறுத்தி 50 ஆயிரம் ரூபாய் பணத்தை தனது வங்கி கணக்கில் வைப்பு செய்யக் கட்டாயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இராணுவச் சிப்பாய் ஒருவர் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் வடக்கில் உள்ள இராணுவ முகாம் ஒன்றில் கடமையாற்றும் குளியாபிட்டிய பிரதேசத்தை 21 வயது இளம் இராணுவ சிப்பாய் ஆவார்.

இவர் 16 வயது சிறுமியுடன் முகநூல் மூலமாக காதல் விவகாரத்தில் ஈடுபட்டுள்ளதோடு இருவரும் ஒருவரை ஒருவர் நேரில் இதுவரை சந்தித்தது இல்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பாதசாரிக் கடவையில் விபத்து; மின்சார சபை ஊழியர் மரணம்!

வவுனியா, ஒக். 31

வவுனியாவில், பிரதேச செயலகத்திற்கு முன்பாகவுள்ள பாதசாரி கடவையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் மின்சார சபை ஊழியரொருவர் உயிரிழந்துள்ளார்.

பாதசாரி கடவையில் சென்றுகொண்டிருந்த நபர் மீது வானொன்று மோதியமையே இவ்விபத்துக்கான காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த விபத்தில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான 48 வயதுடைய நௌபர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், இது குறித்த மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருவதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# காத்தான்குடியில் மௌலவி கைது!

மட்டக்களப்பு, ஒக். 31

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் எட்டு வயது சிறுவனைத் தாக்கிய சந்தேகத்தின் பேரில் மௌலவி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு அவர் இந்தச் சிறுவனைத் தடியால் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த சிறுவன் காத்தான்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கற்பதற்கு ஒதுக்கப்பட்ட பாடத்தை முறையாக ஓதாத காரணத்தினால் குறித்த சிறுவன் தாக்கப்பட்டதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (அ)

# உறங்கிக்கொண்டிருந்த யாசகர் பெற்றோல் ஊற்றி தீ மூட்டி கொலை

## ஹோமாகமவில் சம்பவம்

கொழும்பு, ஒக். 31

ஹோமாகம வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ள ஆய்வுகூடத்துக்கு முன்பாக உறங்கிக் கொண்டிருந்த யாசகர் ஒருவரைக் கொலை செய்த சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹோமாகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், சந்தேக நபர் யாசகர் ஒருவரை பெற்றோல் ஊற்றி தீ வைத்து எரித்ததாகவும், அயலவர்கள் அவரை மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றதாகவும், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

64 வயதுடைய தர்மதாச என்ற நபரே உயிரிழந்துள்ளார். ஹோமாகம, கலவிலவத்த பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# லாகூருக்கு வாராந்தம் 4 சேவைகளை ஆரம்பிக்கும் இலங்கை விமான சேவை

கொழும்பு, ஒக். 31

இலங்கை விமான சேவை இன்று செவ்வாய்க்கிழமை முதல் கொழும்புக்கும் பாகிஸ்தானின் லாகூர் நகருக்கும் இடையில் வாராந்தம் நான்கு விமான சேவைகளை ஆரம்பிக்கவுள்ளது.

அதன்படி, ஒவ்வொரு வாரமும் ஞாயிறு, திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாட்களுக்கு விமான சேவை இடம்பெறவுள்ளது.

பாகிஸ்தானின் கராச்சி நகருக்கும் வாராந்தம் நான்கு விமான சேவைகளை இலங்கை விமான சேவை மேற்கொள்கிறது.

இதன்மூலம் இந்திய துணைக் கண்டத்தில் பாகிஸ்தானின் இரண்டு பெரிய நகரங்களுக்கு இடையே நேரடி சேவைகளை வழங்கும் ஒரே ஒரு வெளிநாட்டு விமான சேவையாக இலங்கை விமான சேவை விளங்குகிறது.

பாகிஸ்தானில் உள்ள பயணிகளுக்கு அதிக வசதிகளை இலங்கை விமான சேவை வழங்குவதால், ஒவ்வொரு வாரமும் கொழும்பு மற்றும் லாகூர் இடையே பயணிக்கும் மொத்தம் 900 இருக்கைகளை கொண்ட விமானத்துக்கு 20 வீதம் கேள்வி அதிகரித்துள்ளது.

இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான எயார்பஸ் ஏ-320, ஏ-321 மற்றும் ஏ-330 ஆகிய விமானங்கள் லாகூருக்கு பயணிக்கும்.

மேலும், விமான நிறுவனம் பிரபலமான விருந்தோம்பல் மற்றும் அரவணைப்புடன் சேவையை வழங்கும் என்று விமான நிறுவனம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது. (அ)

# துருக்கி - இலங்கை இடையே நேரடி விமான சேவை ஆரம்பம்



கொழும்பு, ஒக். 31

துருக்கி மற்றும் இலங்கை இடையிலான நேரடி விமான சேவைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன் முதலாவது சேவையில், துருக்கி விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் 261 பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

கடந்த 10 வருடங்களாக மாலைதீவின் ஊடாகவே கட்டுநாயக்கவிற்கான விமான சேவையை துருக்கி விமான சேவை நிறுவனம் முன்னெடுத்து வந்தது.

துருக்கியின் இஸ்தான்புல் நகரிலிருந்து கட்டுநாயக்கவிற்கான நேரடி விமான பயணத்திற்கு சுமார் 08 மணித்தியாலங்கள் செல்லும் என கணிக்கப்பட்டுள்ளது.

இந்த நேரடி விமான சேவை, திங்கள், செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் காலை 05.40 க்கு துருக்கியில் இருந்து கட்டுநாயக்க நோக்கி முன்னெடுக்கப்படவுள்ளது.

துருக்கியிலிருந்து வரும் விமானம் மீண்டும் காலை 07.40 க்கு துருக்கி நோக்கி புறப்பட்டுச் செல்லவுள்ளது.

இந்த விமான சேவையின் ஊடாக, துருக்கியில் இருந்து இலங்கைக்கு வருகை தரும் பயணிகளின் எண்ணிக்கை மும்மடங்காக அதிகரிக்கும் என விமான நிலையங்கள், விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார். (அ)

## சம்பந்தன் தமிழரின்....

தெரிவித்தார்.

இதன் முழு விவரம் வருமாறு, கேள்வி -சம்பந்தன் பதவி விலகல் சம்பந்தமான விடயத்தை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

பதில் - அவர் தாம் பதவி விலகத் தேவையில்லை என்று கூறியுள்ளார். அவரைக் கட்டாயப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. சம்பந்தனின் பாராளு மன்றக் காலம் 2025 வரை என்று இருந்தாலும் பாராளுமன்றம் அதற்கு முன்னர் கலைக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்களே அதிகம்.

வட, கிழக்குத் தமிழ் பாராளுமன்ற அங்கத்தவர்கள் பாராளுமன்றத்தில் தமது குரலையும் உடலையும் வெளிக் காட்டுவது தான் அவர்களின் கடமை என்று நினைப்பது தவறு. தமிழ் மக்க ளின் வருங்காலம் பாராளுமன்றத்தால் அதன் பெரும்பான்மை அங்கத்தவர் களின் விருப்புடன் சுமுகமாக நிர்ண யிக்கப்படப் போவதில்லை. ஊரறிய உலகறிய எமது அவலங்களை வெளி நாட்டு அரசாங்கங்களுக்குத் தெரி யப்படுத்தி, இலங்கை சம்பந்தமான பொதுக் கருத்தை வெளிநாடுகளில் எமது புலம்பெயர் சகோதரர் வாயிலாக எழ வைத்து எமது நாட்டின் அரசாங் கத்துக்கு போதிய நெருக்குதல்களை ஏற்படுத்தினால்தான் ஏதாவது நடக்கும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையை பாரப்படுத்தினால் எமக்கு நன்மைகள் கிடைக்கலாம். அப்போது கூட சீனாவிடம் முழுமையாக சரணாகதி அடைய சிங்கள அரசியல்வாதிகள் ஆயத்தமாக உள்ளார்கள். தமிழர்களின் உரிமைகளை வழங்குவதிலும் பார்க்க எவரிடமும் நாம் மண்டியிடத் தயார் என்பதே அவர்களின் மனோநிலை.

இந்த விதத்தில் தமிழ் மக்களின் தற்போதைய நிலையை அறிய அவர்களின் இதுவரை கால அவலங் அறிய, அவர்களின் அபிலாஷைகளை அறிய வெளிநாட்டுத் தூதுவர் அகங்கள் நாடும் முக்கிய நபர் சம்பந்தனே. இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் கூட அண்மையில் அவரின் வாசஸ்தலம் சென்று அவரை சந்தித்தார். அவர் பேசுவது விளங்காவிட்டாலும் பக்கத் தில் இருந்து அவற்றை அவர்களுக்கு விளங்கப்படுத்த சுமந்திரன் போன்ற வர்கள் முன்வரவேண்டும்.

அவரைப் புறக்கணிக்கவோ நீக்கவோ நடவடிக்கை எடுக்காமல் அவரின் பங்கை தமிழ் மக்களுக்கு நன்மை பயப் பதாக மாற்றுவதே - அவரின் பெயரைச் சொல்லி இதுவரை காலமும் அரசியல் நடத்தியோரின் கடமையாகும். வெளி உலகம் சம்பந்தனை ஒரு பக்கச்சார்பற்ற ஒரு நம்பகமான தமிழ் தலைவராக நினைக்கின்றது. அவரைப் புறக்கணிக் கவோ நீக்கவோ முனைவது தமிழ் மக்க ளுக்கு இடையூறை விளைவிக்கும். அவர் வட, கிழக்குத் தமிழ் மக்களின் ஓர் அடையாளம். அந்த அடையாளத்தை வெளியேற்றினால் அவர் இடத்துக்கு வரக்கூடியவர்கள் எவரும் இல்லை.

அவரில் பல குறைகள் இருந்துள்ளன - இருக்கின்றன. ஆனால், யாரிடந்தான் குறைகள் இல்லை? அதுவும் தமிழர்கள் மத்தியில் ஒரு தமிழர் பற்றி இன்னொரு தமிழரிடம் கேட்டால் யாரும் நினை யாத குறைகள் எல்லாம் நிறைந்தோடி வெளிவந்து விடுவன. இதனால்தான் நான் அண்மையில் ஓர் ஊடகம் என்னி டம் கேள்வி கேட்டபோது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஒரு கூட்டுத் தலைமை தேவையென்றேன். மாவை சேனாதிராஜா, சிறீதரன், சுமந்திரன் ஆகியோர் அந்தக் கூட்டுத் தலைமையில் இடம்பிடிக்க வேண்டும் என்றும் கூறி னேன். தீர்மானங்கள் அவர்கள் மூவரா லும் ஒருமித்து எடுக்கப்பட வேண்டும் என்றேன்.

சம்பந்தனை இருக்க விடுங்கள். தற்போதைய பாராளுமன்ற காலம் முடிவடையும்போது அவரின் அங்கத்து வம் தானாகவே முடிந்துவிடும். திருகோணமலை மக்களின் தேவைக ளைப் பார்க்க - பாதுகாக்க சம்பந்தன் ஒரு தகுந்த அமைப்பை உண்டு பண்ணு வார். இல்லை என்றால் அதனை அமைக்க இலங்கை தமிழரசுக் கட்சி அவருக்கு உதவி வழங்க வேண்டும். சம்பந்தனை வெளியேற்றுவதில் எனக்கு உடன்பாடில்லை. சம்பந்தன் அவர்கள் தனது சுயசரிதையை அல்லது தனது காலத்தில் நடந்த முக்கிய அரசியல் சந்திப்புகள் பற்றி ஒரு நூலை வெளியிட முன்வர வேண்டும் - என்று குறிப்பிட் டுள்ளார்.

## வடக்கில்....

அனுமதி வழங்கியது.

வவுனியா வடக்கில் அமைந்துள்ள வடுனாகல ரஜமகா விகாரைக்கு சேதம் விளைவிக்கப்பட்ட சம்பவம் தொடர் பான விசாரணைக்காக கல்கமுவ சங்க போதி தேரர் உள்ளிட்டோரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த அவகா சம் வழங்கப்பட்டது.

ஏ. எஸ். துரைராஜா, ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜூன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதியரசர் குழு முன் னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்ட வேளையில், மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தர்ஷன வெரதுவகே நீதிமன்றில் முன்னி லையாகி, பிரதிவாதிகள் முன்வைத்த ஆட்சேபனைகள் தொடர்பான பதில் வாதங்களை சமர்ப்பிக்க கால அவகாசம் கோரினார்.

அதன்படி, அடுத்த ஆண்டு மே 25ஆம் திகதி மனுவை மீள விசார ணைக்கு எடுக்க உத்தரவிட்ட நீதியரசர் குழு அன்றைய திகதிக்கு முன் பதில் வாதங்களை தாக்கல் செய்ய உத்தரவிட் டது.

சமீபத்தில் சிலர் தங்கள் விகாரைக் குள் புகுந்து சிவலிங்கத்தை வைத்து அதன் சொத்துக்களை சேதப்படுத்தினர் என்று மனுதாரர் கூறியுள்ளார். இத னால், தொல்லியல் மதிப்புள்ள விகாரை யின் மரியாதையும், புனிதமும் பாதிக்கப் பட்டதாகவும் மனுதாரர் தெரிவித்துள் ளார்.

இந்த செயலால், தங்களின் அடிப் படை மனித உரிமைகள் மீறப்பட்டதாக தீர்ப்பை வழங்குமாறும், வட மாகா ணத்தில் தொல்பொருள் பெறுமதி கொண்ட பௌத்த விகாரைகளை பாது காப்பதற்கான வேலைத்திட்டத்தை தயா ரிக்க தொல்பொருள் திணைக்கள ஆணையாளர் நாயகம், பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு உத்தரவைப் பிறப்பிக்குமாறும் உயர் நீதிமன்றத்தில் மனுதாரர்கள் மேலும் கோரியுள்ளனர்.

## எட்டு....

அதிகார சபை தெரிவித்துள்ளது

பாலியல் துஷ்பிரயோகம் தவிர 4 ஆயிரம் முறைப்பாடுகள் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களுடன் தொடர்பு டையவை. இந்த வருடத்தில் மார்ச்சி லேயே அதிக துஷ்பிரயோக சம்ப வங்கள் இடம்பெற்றுள்ளன. இக்காலப் பகுதியில் ஆயிரத்து 176 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அத்துடன், மிக மோசமான பாலியல் துஷ்பிரயோ கங்களாக 273 சம்பவங்கள் பதிவாகி யுள்ளன. சிறுவர்கள் பாலியல் சேஷ் டைகளுக்கு உட்படுத்திய சம்பவங்கள் 309 ஆக பதிவாகியுள்ளன.

சிறுவர்களை மிக மோசமாக தாக்கிய சம்பவங்கள் ஆயிரத்து 481 ஆக பதிவாகியுள்ளன. கட்டாய கல்விக்கு உட்படுத்திய துஷ்பிரயோகங்கள் ஆயிரத்து 206 ஆக உள்ளன. கொழும்பு மாவட்டத்திலேயே சிறுவர்களுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள் அதிகம் பதிவாகியுள்ளன. முதல் எட்டு மாதங் களில் இங்கு 830 சம்பவங்க ள் முறைப் பாடுகளாக பதிவாகியுள்ளன.

சிறுவர்களை பாலியல் ரீதியாக துஷ் பிரயோகம் செய்தவர்களில் ஆசிரியர் கள், நெருங்கிய உறவினர்கள், பௌத்த பிக்குகள் மற்றும் இனந்தெரியாதவர்க ளும் உள்ளனர். (ஐ)

# இஸ்ரேலில் பணியாற்றும் இலங்கையரை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு தயார்!

### அமைச்சர் மனுஷ நாணயக்கார

கொழும்பு, ஒக். 31

இஸ்ரேலில் பணி புரியும் இலங்கை யர்கள் அங்கு இருப்பது ஆபத்து என் றால் எந்த சந்தர்ப்பத்திலும் அவர்களை நாட்டுக்கு அழைத்துவர நாங்கள் தயா ராக இருக்கிறோம் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இஸ்ரேல் ஹமாஸ் குழுவினருக்கிடை யில் இடம்பெற்றுவரும் மோதலில் இஸ் ரேலில் உயிரிழந்த அனுலா வீரசிங்கவின் பூதவுடல் நாட்டுக்கு கொண்டுவரப் பட்டு அவரது வீட்டில் வைக்கப்பட்டுள் ளது. இந்நிலையில் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அனுலா வீரசிங்கவுக்கு உரித்தான அனைத்து நட்டஈட்டு கொடுப்பனவுக ளையும் அவ்வாறே செலுத்துவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம். இஸ்ரேலில் பணி புரிந்துவரும் எமது தொழிலாளர்களுக்கு அங்கு இருப்பது ஆபத்து என்றால் எந்த சந்தர்ப்பத்திலும் அவர்களை நாட்டுக்கு அழைத்துவர நாங்கள் தயாராக இருக்கிறோம். என்றா லும் அவ்வாறு நாட்டுக்கு அழைத் துக்கொள்ளுமாறு இதுவரை யாரும் கோரிக்கை விடுக்கவில்லை.

அத்துடன், யுத்தம் இடம்பெறும் பிர தேசங்களில் இருப்பவர்கள் பாதுகாப் பான இடங்களில் இருக்கின்றனர் என்று எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. என்றாலும் இஸ்ரேலில் மாத்திரம் அல்ல, அதற்கு அண்மித்த நாடுகளில் பணி புரிந்துவரும் இலங்கையர்களுக்கும் யுத் தத்தால் ஆபத்து நிலைமை இருப்பதாக இருந்தால், அவர்களை நாட்டுக்கு அழைத்துவர தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தயார் செய்தி ருக்கிறோம். - என்றார். (ஐ)

## 2024....

எதிர்பார்ப்புடன் மக்கள் கோட்டாபய ராஜபக்‌ஷவை ஜனாதிபதி யாக தெரிவு செய்து, 2020ஆம் ஆண்டு பொதுத் தேர் தல் ஊடாக ஆட்சிமாற்றத்தை ஏற்படுத் தினார்கள்.

2019ஆம் ஆண்டு இறுதி பகுதியில் பூகோள மட்டத்தில் தாக்கம் செலுத்திய கோவிட் பெருந்தொற்று தாக்கத்தில் இருந்து நாட்டு மக்களை பாதுகாக்க அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ அவதானம் செலுத்தினார். பொருளாதாரத்தை காட்டிலும் மக்க ளின் சுகாதாரம் குறித்து அவர் கவனம் செலுத்தி அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

நாட்டில் கோவிட் பெருந்தொற்று தாக்கம் செலுத்தியதை ஒரு தரப்பினர் தற்போது மறந்து விட்டார்கள். பொரு ளாதார நெருக்கடியை எமது அமைச்சர வையில் அங்கம் வகித்தவர்கள் அரசியல் நெருக்கடியாக மாற்றியமைத்தார்கள். அப்போதைய சூழலில் ஜனநாயகம் மற் றும் சட்டம் ஒழுங்கு என்பவற்றை பாது காக்க வேண்டிய பொறுப்பு எமக்கு இருந்தது.

அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு உத்தியோகபூர்வ மாக அழைப்பு விடுக்கப்பட்டது. அவர்கள் ஏற்கவில்லை. அதனை தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி யாக தெரிவு செய்தமையால் அவரின் கொள்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர அவர் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை. பிற்பட்ட காலத்தில் அரசாங் கம் எடுத்த தீர்மானங்களுக்கும் அவர் ஒத்துழைப்பு வழங்கவில்லை. மத்திய வங்கி பிணைமுறி மோசடியை தடுப்ப தற்கு அவர் உரிய நடவடிக்கை எடுக்க வில்லை. ஆகவே தவறை சுட்டிக்காட் டும் தற்துணிவு எமக்குண்டு.

பாராளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாகவே ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்துள் ளோம். கூட்டணி அரசாங்கத்தில் ஜனா திபதி எவ்வாறு செயல்பட வேண்டும் என்று ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவது நியாயமானதே. 2024 ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன பெர முனவின் உறுப்பினரையே களமிறக்கு வோம் - என்றார். (ஐ)

## மத்தியகுழு....

பாராளுமன்ற உறுப்புரிமையை துறக்க வேண்டும் என்று அந்தக் கட்சியின் பேச்சாளரும் எம். பியுமான எம். ஏ. சுமந்திரன் அண்மையில் கருத்து வெளி யிட்டிருந்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையிலேயே தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராசாவை தம்மை சந்திக்குமாறு அழைத் துள்ளார் இரா. சம்பந்தன்.

இந்த சந்திப்பு எதிர்வரும் 3 அல்லது 4ஆம் திகதி நடைபெறும் என்று அறிய வருகின்றது. தமிழரசு கட்சியின் மத்திய குழுக்கூட்டம் எதிர்வரும் வெள்ளிக் நடைபெறவுள்ளது. இந்நிலையில், முன்னதாக நடைபெறவுள்ள இந்த சந்திப்பால் மத்திய குழு கூட்டத்தில் இது சார் விடயங்கள் எதிரொலிக்கும் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## 1000 பேருக்கு....

மேம்படுத்தும் முகமாக இந்தப் பணி ஆரம்பமானது. யாழ். போதனா மருத்துவமனையின் கண் சத்திர சிகிச்சை நிபுணர் மலரவனின் நெறிப்படுத்தலில் இந்த சத்திர சிகிச்சை முன்னெடுக்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தை சேர்ந்த 50 பேர் உட்பட 170 பேருக்கு நேற்றைய தினம் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய தினமும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

அசிஸ்ட் ஆர். ஆர். பிரித்தானியா அன் இலங்கை நிறுவனத்தின் ஏற்பாட்டில் அலாக்கா மற்றும் ஆனந்தா பௌண்டேசனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனர்வாழ்வும் - புதுவாழ்வும் நிறுவனத்தின் அனுசரணையில் மேற்கொள்ளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்.போதனா....

அத்துடன், இந்த மருத்துவமனையில் சேர்க்கப் பட்ட நோயாளிகள், மேலதிக சிகிச்சைக்காக வேறு மருத்துவமனை களில் இருந்து இந்த மருத்துவமனைக்கு மாற்றப்படும் நோயாளிகளின் எண் ணிக்கை அதிகமாகிவிட்ட நிலையில், அவர்களுக்கு அவசரமாக இரத்த வகை கள் தேவைப்படுகின்றன. நோயாளிக ளின் உயிரை காப்பாற்ற கணிசமான அளவு இரத்த வகைகள் தேவைப்படு கின்றன.

மேலும், மருத்துவமனையின் நோயாளர் விடுதிகளுக்கும் போதியள வில் இரத்தம் விநியோகிக்கப்பட வேண்டும் என்ற இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டுள்ள போதிலும், தேவைக்கேற்ப இரத்த தானம் வழங்குபவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

எனவே, இரத்த தானம் செய்பவர்கள், சமூக சேவையாளர்கள், நலன் விரும்பி கள், சமூக செயல்பாடுகளில் ஈடுபடும் அமைப்புகள் முன்வந்து இரத்த தானம் செய்து, இரத்தம் பெறும் அவசர தேவை யுடைய நோயாளிகளின் உயிர்களை காப்பாற்ற வேண்டும் - என்றும் இரத்த வங்கி பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு பணி மீண்டும் நவ.20 ஆரம்பம்

முல்லைத்தீவு, ஒக். 31

**நவம்பர் 20 மீண்டும் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என சட்டத்தரணி வி.கே. நிறஞ்சன் தெரிவித்தார்.**

**கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் எடுத்து கொள்ளப் பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு கூறினார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று (நேற்று) அகழ்வுப் பணி ஆரம்பிக்கப்பட இருந்த நிலையில் பேராசிரியர் ராஜ் சோமதேவ சமுக மளிக்க முடியாததனால் கொக்கு தொடுவாய் அகழ்வுப் பணி மீளவும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஆரம் பிக்கப்பட இருப்பதாக தீர்மானிக் கப்பட்டுள்ளது.

அதேநேரம் மிகுதியாக உள்ள செலவுத்தொகை எவ்வளவு என்பது தொடர்பாக கதைக்கப்பட்டு அதற் கான கணக்கறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள் ளப்பட்டது.

சட்டவைத்திய அதிகாரி வாசு தேவவினால் ஏற்கனவே அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் தவிர்ந்த பிற பொருட்கள் பேராசி ரியர் ராஜ் சோமதேவவுக்கு இடைக் கால அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தேவை என்ற அடிப்படையில் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட் டிருந்தது.

காணாமல்போனவர்கள் சார்பில் நாங்கள் தோன்றி அதன் கட்டுகாவல் பாதுகாக்கப்படவேண் டும் என்றும் நீதிமன்றத்தின் கவன த்துக்கு கொண்டு வந்திருந் தோம்.

ராஜ் சோமதேவவினால் குறித்த பகுதியில் 50 மீற்றருக்குள் வேறு மனித எச்சங்கள் இருப்பது சம்பந்த மாக கண்டுபிடிக்கக்கூடிய ராடர் கருவி ஒன்றை கொண்டு வருவதற் கான முயற்சிக்கு விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது.

அது தொடர்பான முழுமை யான விவரங்களை நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கும்படி நீதமன்றத்தினால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இந்த விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு எதிர்வரும் நவம் பர் மாதம் 20 ஆம் திகதி மீண்டும் அதற்கான ஒன்றுகூடல் கொக்கு தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு இடத்தில் மேற்கொள்ளப் பட்டு அகழ்வுப் பணி இடம்பெற வுள்ளது - என்றார். (அ)

## அஸ்வெசும கொடுப்பனவுகள் முதலாம் திகதி வங்கிகளுக்கு!



கொழும்பு, ஒக். 31

ஒகஸ்ட் மாதத்துக்கான அஸ்வெசும கொடுப்பனவு கள் எதிர்வரும் முதலாம் திகதி பயனாளிகளின் கணக் கில் வைப்பிலிடப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இதற்கிடையில், செப்ரெம்பர் மாதத்துக்கான கொடுப் பனவும் நவம்பர் மாதத்தில் செலுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, குறித்த நலத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்படாத விண்ணப்பதாரர்களின் பரிசீலனை நவம் பர் 06 முதல் 12 வரை இடம்பெறும் என்றும் நிதி இரா ஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# உலக வங்கி குழுவினர் யாழ்ப்பாணம் விஜயம்!

யாழ்ப்பாணம், ஒக். 31

இலங்கைக்கு வருகை தந்துள்ள 'உலக வங்கியின் செயற்பாட்டு முகாமைத்துவப் பணிப்பாளர் அன்னா பிஜியர்ட்' தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பா ணத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த குழுவினர் உலக வங்கியின் நிதியுதவியில் கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெற்று வரும் வேலைத்திட்டத்தைப் பார்வையிட் டனர்.

இவ்விஜயத்தில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, வடமாகாண சுகாதாரப் பணிப்பா ளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அ)



## பாடசாலைகளின் வசதிக்கட்டணம் அதிகரிக்கிறது?

கொழும்பு, ஒக். 31

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களில் இருந்து இதுவரை அறவிடப்பட்ட வசதிக் கட்டணத்தை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரச, மாகாண மற்றும் அரச தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மின்கட்டண அதிகரிப்பு காரணமாகவே வசதிக் கட்டணத்தை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக இந்த தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

அதன் தலைமைச் செயலாளர் அஜித் கே. திலகரத்ன கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இதனை கூறினார். (அ)

# இரண்டு நாள் பணிப்புறக்கணிப்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்!

### அரசாங்கத்துக்கு இறுதி எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 31

போக்குவரத்து கொடுப்பனவு அதிகரிப்பு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இரண்டு நாள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் ஈடுபட்டுள்ளது.

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் கீழ் உள்ள அனைத்து அதிகாரிகளும் இன்றும் நாளையும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக சங்கத் தின் செயலாளர் உபுல் ரோஹண கூறினார்.

பொது சுகாதார பரிசோதகர்கள் தொழிற்சங்க நடவ டிக்கையில் ஈடுபட்டாலும் அத்தியாவசிய சேவைக ளுக்கு இடையூறு ஏற்படாது எனவும் உபுல் ரோஹன தெரிவித்தார்.

அரசாங்கம் உடனடியாக தமது கோரிக்கைகளை நிறைவேற்றாவிடின் எதிர்காலத்தில் பாரிய போராட் டங்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத் துள்ளதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன், பலமுறை அரசாங்கத்துடன், கலந்துரை யாடல்கள் நடத்தியும் இதுவரை தீர்வுகள் வழங்கப்பட வில்லை. இம்முறை வரவு - செலவுத்திட்டத்தின் ஊடாகவேனும் தமக்கான போக்குவரத்து கொடுப்ப னவு உட்பட ஏனைய கொடுப்பனவுகளை அதிகரிப்பதற் கான வழிவகைகள் செய்யப்பட வேண்டும் எனவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள் ளது.

இதேவேளை, இன்றைய தினமும் இந்த போராட்டம் தொடரும் எனவும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளனது. (அ)

## வாகன இறக்குமதி தொடர்பில் அறிக்கை தயாரிக்க விசேட குழு

கொழும்பு, ஒக். 31



வாகன இறக்குமதி தொடர்பில் அறிக்கை தயாரிப் பதற்காக ஜனாதிபதி செயலகத்தினால் விசேட குழு வொன்று நியமிக்கப் பட்டுள்ளது.

வாகனங்களின் தேவை, வீதிகளிலுள்ள இடவசதி, எரிபொருளுக்கான செலவு மற்றும் வாகன இறக்குமதிக் கான தொகை ஆகியன தொடர்பில் இங்கு விசேட கவ னம் செலுத்தப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட் டிய குறிப்பிட்டார். (அ)

## இந்த மாதத்தில் மாத்திரம் 64 தமிழக மீனவர்கள் கைது

கொழும்பு, ஒக. 31

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி கடற்றொழி லில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்த மாதத்தில் மாத்தி ரம் 64 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையின் ஊடகத் தகவல்கள் இதனைத் தெரி வித்துள்ளன.

அவர்கள் பயணித்த 10 மீன்பிடிப் படகுகளும் பறி முதல் செய்யப்பட்டுள்ளதாக அந்த தகவல்கள் குறிப்பிட் டுள்ளன.

யாழ்ப்பாணம், மன்னார், ஆகிய பகுதிகளுக்கு உட் பட்ட கடற்பிராந்தியங்களில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# ஐரோப்பாவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும்?

கொழும்பு, ஒக். 31

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத் துக்கு இடையே நிலவும் மோதல் கள் காரணமாக ஐரோப்பாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை அதிகரிக்கக் கூடுமென சந்தை தகவல்கள் தெரி விக்கின்றன.

கப்பல் நிறுவனங்கள் தமது காப்புறுதி கட்டணத்தை உயர்த்தி யுள்ளதன் காரணமாக இவ்வாறு விலை அதிகரிக்கக் கூடுமென தெரி விக்கப்பட்டுள்ளது.

தற்போதைய யுத்த சூழ்நிலை யில் கப்பல்கள் சுயஸ் கால்வாயில் பயணிப்பதால் அபாய காப்புறுதி கட்டணத்தை குறித்த கப்பல் நிறு வனங்கள் அதிகரித்துள்ளதாக சர்வ தேச ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

எனவே, கப்பல்களின் சரக்குக் கட்டணமும் அதிகரிக்கப்படலாம் எனவும் சந்தை தகவல்கள் குறிப்பிட் டுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# ரோஹித் 18,000

லக்னோ, ஒக். 31

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 18 ஆயிரம் ஓட்டங்களை கடந்துள்ளார் இந்திய அணியின் ரோஹித் சர்மா.

கேப்டனாக தனது 100ஆவது போட்டியில் விளையாடும் தொடக்க வீரரான ரோஹித் சர்மா அரைச் சதமடித்துள்ளார். இதன்மூலம் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 18 ஆயிரம் ஓட்டங்களை கடந்துள்ளார்.

இந்திய அணிக்காக அதிக ஓட்டங்கள் அடித்தவர் பட்டியலில் 5வது இடத்தில் உள்ளார். சச்சின் டெண்டுல்கர்- 34,357 ஓட்டங்கள், விராட் கோலி- 26,121 ஓட்டங்கள், ராகுல் டிராவிட் - 24,064, சௌரவ் கங்குலி - 18,433, ரோஹித் சர்மா- 18,001.

இதேவேளை, உலகக் கிண்ணத் தொடரில் அதிக சிக்ஸர்கள் (20) அடித்தவர்கள் பட்டியலில் ரோஹித் முதலிடத்தில் இருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முன்னணி பந்துவீச்சாளர் லஹிரு காயத்தால் விலகல்!

புதுடில்லி, ஒக். 31

காயம் காரணமாக இலங்கை வீரர் லஹிரு குமார உலகக் கிண்ணத் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் தொடர் தோல்விகளை இலங்கை சந்தித்தது. ஆனால், கடந்த இரண்டு போட்டிகளில் இலங்கை அணி வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெறும் வாய்ப்பை உயிர்ப்புடன் வைத்துள்ளது.



இந்த நிலையில், லஹிரு குமார காயம் காரணமாக உலகக் கிண்ணத் தொடரிலிருந்து விலகியுள்ளார். இது அணிக்கு பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது. லஹிரு குமார இங்கிலாந்துக்கு எதிராக தனது சிறப்பான பந்துவீச்சை வெளிப்படுத்தி 3 விக்கெட்களை கைப்பற்றி அசத்தியிருந்தார். இந்தப் போட்டியில் இலங்கை 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது. லஹிரு குமாரவுக்கு பதிலாக சமீரா துஷ்மந்த சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# எலைட் கிண்ண ரென்னிஸ் ஹட்டாட் மாயா சம்பியன்




பீஜிங், ஒக். 31

சீனாவில் நடைபெற்ற டபிள்யூ. ரி. ஏ. எலைட் கிண்ண மகளிர் ரென்னிஸ் போட்டியில் பிரேஸிலின் பியாட்ரிஸ் ஹட்டாட் மாயா சம்பியன் பட்டம் வென்றார்.

இறுதிச்சுற்றில், போட்டித் தரவரிசையில் 8ஆம் இடத்திலிருந்த அவர் 7-6 (13ஃ11), 7-6 (7ஃ4) என்ற செற்களில், 7-ஆம் இடத்திலிருந்த கின்வென் ஜெங்கை வீழ்த்தினார்.

இதன் மூலம் மாயா தனது 3ஆவது டபிள்யூ. ரி. ஏ. பட்டத்தை வென்றிருக்கிறார். 2 மணி நேரம் 51 நிமிடங்கள் நீடித்த இந்த ஆட்டம், நடப்பு ஆண்டு டபிள்யூ. ரி. ஏ டூர் போட்டிகளில், நேர் செற்கள் கொண்ட மிக நீண்ட நேர இறுதி ஆட்டமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

# 20 வருடங்களின் பின்னர் வெற்றி இங்கிலாந்தை வீழ்த்தியது இந்தியா!



லக்னோ, ஒக். 31

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 20 ஆண்டுகளுக்கு பிறகு இங்கிலாந்தை உலகக் கிண்ணத்தில் இந்திய அணி வீழ்த்தியுள்ளது.

நேற்று முன்தினம் லக்னோவில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோஸ் பட்லர் களத்தடுப்பை தெரிவு செய்தது. இந்திய அணி 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 229 ஓட்டங்கள் எடுத்தது.

ரோஹித் சர்மாவும் ஷுப்மன் கில்லும் தொடக்கம் கொடுத்தனர். தொடக்கத்திலேயே ஷுப்மன் கில்லை ஆட்டமிழக்க செய்து இந்திய அணியினருக்கு அதிர்ச்சி அளித்தார் கிறிஸ் வோக்ஸ். ஷுப்மன் கில் 13 பந்துகளில் 9 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கிறிஸ் வோக்ஸ் பந்தில் போல்ட் ஆனார்.

அடுத்துவந்த விராட் கோலி ஓட்டம் எதுவும் எடுக்காமலேயே பெவிலியன் திரும்பினார். டேவிட் வில்லி வீசிய பந்தை அடிக்கமுயன்ற கோலி பென் ஸ்ரோக்ஸிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதைத் தொடர்ந்து விளையாட வந்த ஸ்ரேயஸ் ஐயரும் விரைவிலேயே ஆட்டமிழந்தார். 16 பந்துகளில் 4 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்த ஸ்ரேயஸ் ஐயர், கிறிஸ் வோக்ஸ் பந்தில் மார்க் வூட்டிடம் பிடி கொடுத்து வீழ்ந்தார்.

இதனால் 11.5 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 40 ஓட்டங்கள் என்ற மோசமான நிலைக்கு இந்திய அணி தள்ளப்பட்டது. இதையடுத்து 4ஆவது விக்கெட்டுக்கு ரோஹித்துடன் சேர்ந்த கே. எல். ராகுல் சிறப்பான இன்னிங்ஸை கட்டமைத்தார். ராகுல் நிதானமாக ஆட ரோஹித் சர்மா அதிரடியாக ஆடத் தொடங்கினார்.

4ஆவது விக்கெட்டுக்கு 91 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் இந்த இணையைப் பிரித்தார் டேவிட் வில்லி. அவரது பந்துவீச்சில் கே. எல். ராகுல், பெயர்ஸ்ரோவிடம் பிடிகொடுத்து வீழ்ந்தார். 58 பந்துகளை சந்தித்த அவர் 3 பௌண்ட்ரிகளுடன் 39 ஓட்டங்கள் சேர்த்தார்.

இதையடுத்து ரோஹித்துடன், சூர்யகுமார் யாதவ் சேர்ந்தார். அரைச் சதமடித்து அபாரமாக ஆடிக் கொண்டிருந்த ரோஹித் சர்மா சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் வீழ்ந்தார். அவர் 101 பந்துகளில் 87 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆதில் ரஷித் பந்தில் லிவிங்ஸ்டனிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அப்போது, இந்திய அணி 5 விக்கெட் இழப்புக்கு 164 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பின்னர் வந்த ரவீந்திர ஜடேஜா 8, மொகமது ஷமி ஓர் ஓட்டத்துடன் பெவிலியன் திரும்பினர்.

அதன் பின்னர் கடைசி ஓவர்களில் சூர்யகுமார் யாதவ் ஓட்டங்களை குவிக்க முயன்றார். 47 பந்துகளில் 49 ஓட்டங்களை சந்தித்த நிலையில் அவர், டேவிட் வில்லி பந்தில் கிறிஸ் வோக்ஸிடம் பிடிகொடுத்து வீழ்ந்தார். அவரின் ஓட்டங்களில் 4 பௌண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கும்.

பும்ரா 16 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தின் கடைசி பந்தில் ரன்-அவுட் ஆனார். குல்தீப் யாதவ் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இங்கிலாந்து தரப்பில் டேவிட் வில்லி 3 விக்கெட்களும், கிறிஸ் வோக்ஸ், ஆதில் ரஷித் ஆகியோர் தலா 2 விக்கெட்களும், மார்க் வூட் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் 230 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி விளையாடத் தொடங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக ஜொன்னி பெயர்ஸ்ரோவும், டேவிட் மலனும் களமிறங்கினர். இருவரும் நிதானமாக ஆடினர். போட்டியின் ஐந்தாவது ஓவரின் 5ஆவது பந்தில் டேவிட் மலனை, போல்ட் ஆக்கினார் பும்ரா. அவர் 17 பந்துகளில் 16 ஓட்டங்கள் சேர்த்தார். அதற்கு அடுத்து விளையாட வந்த ஜோ ரூட்டை, முதல் பந்திலேயே எல். பி. டபிள்யூ. முறையில் ஆட்டமிழக்க செய்தார் பும்ரா.

பின்னர் வந்த பென் ஸ்டோக்ஸ், 10 பந்துகளை சந்தித்த நிலையில் ஓட்டம் எடுக்காமல், மொகமது ஷமி பந்தில் ஆட்டமிழந்தார். பின்னர் ஜொன்னி பெயர்ஸ்ரோவையும் 14 ஓட்டங்களில் வெளியேற்றினார் ஷமி. இதனால் இங்கிலாந்து 4 விக்கெட் இழப்புக்கு 39 ஓட்டங்கள் என்ற மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது.

5ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த ஜோஸ் பட்லரை 10 ஓட்டங்களில், குல்தீப் யாதவ் போல்ட் ஆக்கினார். பின்னர் வந்த மொயின் அலி நிதானமாக விளையாடினார். 31 பந்துகளில் 15 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், மொயின் அலியை, மொகமது ஷமி பெவிலியனுக்கு அனுப்பினார்.

பின்னர் வந்த லிவிங்ஸ்டன் 27, கிறிஸ் வோக்ஸ் 10, ஆதில் ரஷித் 13 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். டேவிட் வில்லி 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இறுதியில் 34.5 ஓவர்களில் 129 ஓட்டங்களுக்கு இங்கிலாந்து ஆட்டமிழந்தது. இதையடுத்து 100 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது.

உலகக் கிண்ணத் தொடரில் 20 ஆண்டுகளுக்குப் பிறகு இங்கிலாந்தை இந்திய அணி வீழ்த்தியுள்ளது. இதற்கு முன்பு 2003இல் இங்கிலாந்தை, இந்தியா வீழ்த்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஷமி 4, பும்ரா 3, குல்தீப் யாதவ் 2, ரவீந்திர ஜடேஜா ஒரு விக்கெட் வீழ்த்தினர். ஷமி, பும்ராவின்அபார பந்துவீச்சாலும், ரோஹித்தின் அபார ஆட்டத்தாலும் இந்திய அணி வெற்றியைச் சுவைத்தது.

இந்திய அணி 12 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறது. இங்கிலாந்து அரையிறுதி வாய்ப்பை ஏற்கனவே இழந்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சம்பியன்ஸ் கிண்ணத்துக்கு 7 அணிகள் தகுதி பெறும்!

## ஐ. சி. சி. அறிவிப்பு




டுபாய், ஒக். 31

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் முதல் 7 இடங்களை பிடிக்கும் அணிகள், 2025இல் நடைபெற இருக்கும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கு தகுதிபெறும் என்று ஐ. சி. சி. அறிவித்திருக்கிறது.

8 அணிகள் பங்கேற்கும் இந்தப் போட்டியில், இந்த 7 அணிகளுடன், போட்டியை நடத்தும் பாகிஸ்தானும் இணையும். நடப்பு உலக கிண்ணத் தொடரின் தற்போதைய நிலவரப்படி, இங்கிலாந்து, பங்களாதேஷ் அணிகளே சம்பியன்ஸ் கிண்ணத்துக்கு தகுதிபெறுவது கேள்விக்குறியாகியிருக்கிறது. ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து அணிகள் அந்த வட்டத்துக்குள்ளாக இருக்கின்றன.

இது தவிர, நடப்பு உலகக் கிண்ணத்தில் களம் காணாத மேற்கிந்தியத் தீவுகள், அயர்லாந்து, சிம்பாப்வே போன்ற அணிகள் அந்த சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்க வாய்ப்பில்லை. 2025 சம்பியன்ஸ் கிண்ணத்தில் பங்கேற்கும் 8 அணிகள் 2 குழுக்களாகப் பிரிக்கப்படும். அவற்றில் முதலிரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் நேரடியாக அரையிறுதிக்குத் தகுதி பெறும்.

## நாடுகள் தாண்டி பரவும் போர்:

# சிரியா மீது இஸ்ரேல் தொடரும் வான் தாக்குதல்! இஸ்ரேல் மீது ஈரான் போர் தொடுக்க சாத்தியமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

இஸ்ரேல் தற்போது நடத்தி வரும் போர் காசாவை தாண்டி பரவும் என்ற அச்சங்கள் உள்ள நிலையில் அதை உறுதிப்படுத்தும் வகையில் லெபனான், சிரியாவில் நடக்கும் தாக்குதல்கள் உறுதிப் படுத்துகின்றன.

லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா முகாம்களை குறிவைத்து முதலில் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இதன்பின் அயல் நாடான சிரியா மீதும் இஸ்ரேல் விமானங்கள் குண்டு மழை பொழிந்துள்ளன. இதில் எட்டு சிரியா இராணுவ வீரர்கள் இறந்துள்ளதாகவும் ஏழு பேர் காயமடைந்துள்ளதாகவும் சிரியா அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

சிரிய ராணுவத்தின் ஐந்தாவது பிரிவின் தலைமையக கட்டடமும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிரியா பகுதியிலிருந்து இஸ்ரேல் மீது ராக்கெட் தாக்குதல்கள் நடத்தப்பட்டதற்கு பதிலடியாக இஸ்ரேல் இத்தாக்குதல்களை நடத்தியிருக்கலாம் என கூறப்படுகிறது.

ஜோர்டான் எல்லையில் கோலன் குன்றுகளுக்கு அருகில் முகாமிட்டிருக்கும் இஸ்ரேல் படையினர் மீது, சிரியாவிலிருந்து ராக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டதற்கு பதிலடியாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை சிரியா ராணுவ முகாம்களைக் குறிவைத்துத் தாக்கியதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

**அலப்போ விமான நிலையம் மீது தாக்குதல்**

சிரியாவின் அலப்போ விமானநிலையம் மீது இஸ்ரேல் வான்படைகள் நடத்திய தாக்குதலில் விமான ஓடுதளம் சேதமடைந்திருப்பதாக சிரியா பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது. கடந்த 2 வாரங்களில் மட்டும்



அலப்போ விமான நிலையம் மீது 4ஆவது முறையாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மத்திய தரைக்கடல் பகுதியாக வந்த இஸ்ரேல் விமானப்படையைச் சேர்ந்த விமானங்கள் இரண்டு ஏவுகணைகளை வீசி இத்தாக்குதலை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த தாக்குதல்களில் சேதமடைந்திருந்த சாலைகளை சீர்படுத்தும் பணிகளில் ஊழியர்கள் ஈடுபட்டிருந்த நிலையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதல் காரணமாக விமான நிலையம் மீண்டும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் போன்ற நாடுகளில் இருந்து சிரியா விமான நிலையங்களுக்கு வெடி பொருட்கள் கொண்டு வரப்படுகிறது என்பதன் அடிப்படையில் இஸ்ரேல் ராணுவத்தினர் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்றும் கூறப்படுகிறது. சிரியா நாட்டின் விமான நிலையத்தின் மீது இஸ்ரேல் படையினர், தொடர்ந்து நான்காவது முறையாக தாக்குதல் நடத்தியிருப்பதாகவும் அந்நாட்டு பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

**இஸ்ரேல் மீது ஈரான் போர் தொடுக்குமா?**

ஹமாஸ் தாக்குதலின் பின் இஸ்ரேலின் பதிலடித் தாக்குதலைத் தொடர்ந்து, அடுத்தக்கட்டமாக தற்போது காசாப் பகுதியில் இஸ்ரேலின் படையெடுப்பு தொடர்கிறது. இந்த மோதலில் இஸ்ரேலுக்கு எதிராக






ஈரான் நேரடியாக போரில் இறங்கினால், அது அமெரிக்காவையும் அதன் நட்பு நாடுகளையும் நேரடியாகப் போரில் சேரத் தூண்டுமா என்ற ஐயமும் எழுகிறது.

இது பிராந்திய போருக்கு வழிவகுக்குமா எனும் கேள்வியும் எழுகிறது. இதற்கிடையே இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா போர்க்கப்பல்களை தொடர்ந்து அதிநவீன எவ் 16 விமானங்களையும் தற்போது அனுப்பியுள்ளது.

ஈரான் அல்லது அதன் லெபனான் கூட்டாளியான ஹிஸ்புல்லா தலையிடுவதற்கான சாத்தியக்கூறு குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடனிடம் கேட்டபோது, ஜோ பைடன் “வேண்டாம்” என பதிலளித்தார். அதாவது அவர்கள் தலையிட வேண்டாம் என்ற பொருள்படும்படி ஆங்கிலத்தில் பதிலளித்திருந்தார் என ஊடகங்கள் தெரிவித்தன.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான மோதல், அதன் தாக்கம் மற்றும் அதன் முடிவு உள்ளிட்டவை குறித்து நூற்றக்கணக்கான கேள்விகள் பல ஊடகவியலளர்கள் மனதில் எழுந்தாலும் அதற்கான பதிலை தேடுவது கடினமே.

இந்த மோதலில் மற்றய அயல் நாடுகளும் ஈடுபடுமா என பலர் கேட்டுள்ளனர். அத்துடன் போர் களத்தில் இருந்து செய்தி சேகரித்துக் கொண்டிருக்கும் செய்தியாளர்களின் மேல் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளில் ஒன்றானது “இது மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்குமா ? என்பதாகும்.

**இரு அணியாக பிரியும் உலக நாடுகள்:**

இஸ்ரேல் - பாலஸ்தீன போரின் எதிர்விளைவாக சிரியா மீது இஸ்ரேல் விமானங்கள் தாக்குதல் நடத்திய சம்பவத்தில் எட்டு இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ள




னர். இந்த போர் பதற்றத்தால் இரு அணிகளாக பிரியும் உலக நாடுகளினால் இம்மோதல் ஓர் பிராந்திய போராக மாறக்கூடிய ஆபத்து அதிகம் இருப்பதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இஸ்ரேல் அரசு காசா மீது கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதிமுதல் தாக்குதல் நடத்தி வருவதுடன், லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா முகாம்களையும் குறிவைத்து தாக்குதல் நடத்துகிறது. இஸ்ரேலினால் போர் பதற்றம் காஸாவை தாண்டி உலக நாடுகளிலும் எதிரொலிக்கும் அச்ச சூழ்நிலை எழுந்துள்ளது.

அதனை உறுதிப்படுத்தும் விதமாகவே லெபனான் மற்றும் சிரியாவில் நடக்கும் தாக்குதல்கள் பார்க்கப்படு கின்றன. இதனால் உலக வல்லரசுகளும் இரு அணிக ளாக பிரிந்து இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்துக்கு ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றன.

இது இவ்வாறிருக்க இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் அதற்கு எதிரான இஸ்லாமிய அமைப்பின் தலைவர்கள் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளனர்.

லெபனானின் பெய்ரூட்டில் நடந்த இச்சந்திப்பில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ருல்லா, ஹமாஸ் துணைத்தலைவர் சலே அல் அரவுரி, பாலஸ்தீன ஜிகாத் தலைவர் ஜியாத் அல் நகாலா ஆகியோர் இப்பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளனர்.

**லெபனான் மீதும் இஸ்ரேல் தாக்குதல்:**

சிரியா மட்டுமன்றி, லெபனான் மீதும் இஸ்ரேல் தாக்குதல்களை நடத்த ஆரம்பித்துள்ளதால் காஸா பகுதி மக்களுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா போராளிகள் இஸ்ரேலுக்கு எதிராக நேரடியாக போர் தொடுக்க வாய்ப்பு உள்ளது.

இஸ்ரேல் மீது வரும் நாட்களில் ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் இணைந்து தாக்குதல்களை நடத்த கூடுமென சர்வதேச ஊடகங்கள் ஊகம் தெரிவித்துள்ளன. இவ்வாறான சூழ்நிலை எழுந்தால் அமெரிக்கா சார் மற்றும் ரஷ்யா சார் அணிகள் நேரடியாக ஆதரவை வழங்கும் நிலைமை உருவாகலாம் என சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் ஒரு இலட்சம் வீரர்கள், இரண்டு இலட்சம்



அதிநவீன ஏவுகணைகள், ஏராளமான பீரங்கிகளை கொண்ட ஹிஸ்புல்லா போராளிகள் நேரடியாக போரில் இறங்கினால் பாதிப்புகள் அதிகமாக இருக்கும். பாலஸ்தீன மக்களுக்காகவும் முஸ்லிம் நாடுகளுக்கு ஆதரவாகவும் ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் குரல் எழுப்பி வருகின்றன.

இதே சூழல் தொடர்ந்து நீடித்தால் அமெரிக்கா தலைமையில் ஓரணியும் ரஷ்யா, சீனா தலைமையில் எதிரணியும் போரில் களமிறங்கவும் வாய்ப்பிருக்கிறது. இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போர் பிராந்திய போராக மாறக்கூடிய ஆபத்து அதிகம் இருப்பதாகவும் சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**காசா பகுதியில் தொடரும் குண்டுவீச்சு:**

தற்போது காசா பகுதியில் தனது குண்டுவீச்சை இஸ்ரேல் ராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது. தரைவழித் தாக்குதலையும் அதிகரிக்க திட்டம் தீட்டி வருகிறது. காசா பகுதிக்குள் இஸ்ரேல் தரைவழித் தாக்குதலை எப்போது வேண்டுமானாலும் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், போர் விமானத் தாக்குதலை ராணுவம் அதிகரித்துள்ளது. கட்டடங்கள் பலவும் இடிபாடுகளாக மாறியுள்ளன.

வான்வழித் தாக்குதல் மட்டுமின்றி, காசாவுக்குள் தரைவழியாக நுழைந்து தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் நடாத்துகிறது. ஹமாஸ் அமைப்பைக் குறிவைத்து காசா பகுதியில் தாக்குதல் நடத்துவதாக இஸ்ரேல் ராணுவம் கூறினாலும், அதன் குண்டுவீச்சில் நூற்றுக் கணக்கான சிறுவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் உயிரிழந்து வருகின்றனர்.



# கேரளா கிறிஸ்தவ ஜெபக் கூட்டத்தில் குண்டுவெடிப்பு: பிடிபட்டவர் யார்? எதற்காக குண்டு வைத்தார்?

இந்தியாவின் கேரள மாநிலத்தில் கிறிஸ்தவர்களின் ஒரு பிரிவான யெகோவா ஜெபக் கூட்டத்தின்போது ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் ஒருவர் பலியாகியுள்ளார், 36 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்த குண்டுவெடிப்பு தொடர்பாக ஒருவர் பிடிபட்டுள்ளார். யார் அவர்? குண்டு வைத்தது ஏன்?

கொச்சியில் களமச்சேரியில் உள்ள சாம்ரா சர்வதேச மாநாட்டு மையத்தில் யெகோவாவின் சாட்சிகளின் மண்டல மாநாடு கடந்த 27ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.

அக்டோபர் 29, காலையில் இந்த மாநாட்டின் பிரார்த்தனைக் கூட்டம் நடந்துகொண்டிருந்த போது, மாநாட்டிற்குள் சில முறை வெடிப்புகள் நிகழ்ந்தன. இந்த குண்டுவெடிப்பு மொத்தம் மூன்று இடங்களில் நிகழ்ந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

காலை பிரார்த்தனை முடிந்த உடனேயே மண்டபத்தில் முதல் வெடிப்பு நிகழ்ந்ததாகவும், அதைத் தொடர்ந்து மேலும் இரண்டு முறை என மூன்று முறை குண்டுவெடிப்பு நடந்ததாகவும் ஜெபக் கூடத்தின் உள்ளூர் செய்தித் தொடர்பாளர் ஸ்ரீகுமார் கூறினார்.

கேரளாவில் ஏற்பட்டது குண்டு வெடிப்பு சம்பவம், அது விபத்து அல்ல என்று காவல் டி.ஜி.பி டாக்டர் ஷைக் தர்வேஷ் சாஹேப் உறுதிப்படுத்தியுள்ளார்.

**காவல்துறை டி.ஜி.பி. என்ன கூறினார்?**

செய்தியாளர்களைச் சந்தித்த அவர், “காலை 9.40 மணிக்கு வெடிப்பு ஏற்பட்டது. இதில் ஒருவர் பலியாகியுள்ளார். 36 பேர் காயமடைந்துள்ளனர். முதல்கட்ட விசாரணையில் கையால் உருவாக்கப்பட்ட சக்தி குறைவான வெடிகுண்டு பயன்படுத்தப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது.

நாங்கள் எல்லா கோணங்களிலும் விசாரணை நடத்தி வருகிறோம். இதற்குப் பின்னால் யார் இருக்கிறார் எனக் கண்டறிந்து கடுமையான நடவடிக்கை எடுப்போம். அதேநேரம் மக்கள் அனைவரும் அமைதியாக இருக்க வேண்டுகிறேன். வெறுப்பைத் தூண்டும் வண்ணம் யாரும் சமூக ஊடகங்களில் பதிவிட வேண்டாம். அப்படிச் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்,” என்றார்.

அன்றைய நிகழ்ச்சிகள் காலை 9.30 மணிக்குத் தொடங்கின. 9.40க்கு பிரார்த்தனை நடைபெற்றது. பிரார்த்தனை முடிந்ததும் சுமார் 2500 பேர் குழுமியிருந்த மண்டபத்தின் மையப் பகுதியில் வெடி விபத்து ஏற்பட்டது. அப்போது அனைவரும் அரங்கில் நின்று கொண்டிருந் தனர்.

**இது மிகவும் துர்திருஷ்டவசமான நிகழ்வு - கேரள முதல்வர்**

அடுத்தடுத்து மூன்று முறை வெடிப்பு நிகழ்ந்தது. முதல் வெடிப்புக்குப் பிறகு, மண்டபத்தின் இடது மற்றும் வலது பக்கங்களில் வெடிப்பு ஏற்பட்டன.



ஒருவர் உடல் முழுவதும் தீக்காயங்களுடன் உடனடியாக உயிரிழந்தார். மண்டபத்தில் இருந்த பலர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



கேரளாவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள இந்தச் சம்பவம் குறித்து, கேரள முதல்வர் பினராயி விஜயன், “இது மிகவும் துர்திருஷ்டவசமான நிகழ்வு. காவல்துறையினர் இந்தச் சம்பவத்தை மிகவும் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். மாநில காவல்துறை டி.ஜி.பி உட்பட உயர் அதிகாரிகள் கொச்சிக்கு சென்றுள்ளனர். காயமடைந்தவர்களில் இரண்டு பேரின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது,” என்று தெரிவித்துள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கேரள முதல்வர் பினராயி விஜயனுடன் இந்த சம்பவம் குறித்து பேசினார் . தேசிய புலனாய்வு முகமை மற்றும் தேசிய பாதுகாப்பு படையினர் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணை நடத்த அவர் உத்தரவிட்டார்.

**பினராயிடம் பேசிய அமித் ஷா**

இந்த சம்பவம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் முரளிதரன், “கிறிஸ்துவ மத மக்களின் பொதுப்பிரார்த்தனை கூட்டத்தில் இப்படி ஒரு வெடிகுண்டு தாக்குதல் நடந்தது அறிந்து மிகவும் அதிர்ச்சிக்குள்ளானேன். இச்சம்பவம் குறித்து மாநில முதல்வர் பினராயி விஜயனை தொலைபேசி வாயிலாக உள்துறை அமைச்சர் அமித்ஷா, தொடர்பு கொண்டு பேசினார். அவரைத்தொடர்ந்து நானும், முதல்வரை தொடர்பு கொண்டு பேசினேன். இது வெடிகுண்டு தாக்குதல்தான் என டிஜிபி உறுதிப்படுத்தியுள்ளார்” என்றார்.

இப்படிபட்ட தாக்குதல் நடக்கும் என புலனாய்வு துறைகள் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்துள்ளார்களா என கேட்டதற்கு, விசாரணையின் முடிவிலேயே தெரிய வரும் என்றார்.

கேரள ஆளுநர் ஆரிஃப் முகமது கான், “களமச்சேரியில் மதக் கூட்டத்தில் நடைபெற்ற வெடிப்பில் ஒருவர் இறந்து, 20 பேர் காயமுற்றது குறித்து அறிந்து அதிர்ச்சி ஆனேன். இறந்தவரின் குடும்பத்துக்கு ஆறுதல் தெரிவிக்கிறேன். காயமுற்றவர்கள் விரைவில் குணமடைய விழைகிறேன்” என்று தெரிவித்திருந்தார்.

திருவனந்தபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் சசி தரூர், “கேரளாவில் யெகோவா ஜெபக் கூட்டத்தில் குண்டு வெடிப்பு ஏற்பட்டுள்ளது அதிர்ச்சி அளிக்கிறது. இதுபோன்ற காட்டுமிராண்டித்தனத்தை கண்டிப்பதில் அனைத்து மத தலைவர்களும் ஒன்றிணைய வேண்டும்,” என்று தனது எக்ஸ் சமூக ஊடக பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

**குண்டுவெடிப்பு தொடர்பாக ஒருவர் கைது**

கேரளாவில் கலமசேரியில் கிறிஸ்தவ ஜெபக்கூட்டத்தில் நடந்த குண்டு வெடிப்பு தொடர்பாக ஒருவர் பிடிபட்டுள்ளார்.

அதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய கேரள ஏடிஜிபி (சட்டம் மற்றும் ஒழுங்கு) எம்.ஆர்.அஜித் குமார், “இதனை தாமே செய்ததாகக் கூறி திருச்சூர் மாவட்டத்தின் கிராமப்புறமான கொடக்கரா காவல் நிலையத்தில் ஒருவர் சரணடைந்துள்ளார். அவர் பெயர் டொமினிக் மார்ட்டின். அவரும் அந்த சபாவைச் சேர்ந்தவர் என்று கூறுகிறார். அதனை நாங்கள் சரிபார்த்து வருகிறோம். இந்த வழக்கின் அனைத்து அம்சங்களையும் நாங்கள் ஆராய்ந்து வருகிறோம். மண்டபத்தின் மையப் பகுதியில் குண்டுவெடிப்பு நடந்தது.” என்று கூறினார்.

**குண்டு வைத்தது ஏன்? மார்ட்டின் வீடியோ**

கிறிஸ்தவ ஜெபக்கூட்ட குண்டு வெடிப்புக்கு பொறுப்பேற்று காவல் நிலையத்தில் சரணடைந்துள்ள மார்ட்டின், அதற்கு முன்னதாக தான் குண்டு வைத்தது ஏன் என்பது குறித்து விளக்கி பேஸ்புக் பக்கத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.



“என்னோட பெயர் மார்டின்.

இப்போது நடந்த சம்பவம் குறித்து உங்கள் அனைவருக்கும் தெரியவந்திருக்கும் என நம்புகிறேன். யெகோவாவின் சாட்சிகள் அமைப்பினர் நடத்திய ஒரு கூட்டத்தில் குண்டு வெடிப்பு நடைபெற்று பயங்கர சேதம் ஏற்பட்டுள்ளது.

என்னவிதமான சேதம் ஏற்பட்டது என்பது எனக்கு முழுமையாக தெரியாவிட்டாலும், சம்பவம் நடைபெற்று பயங்கர சேதம் ஏற்பட்டுள்ளது என்பது எனக்கு உறுதியாக தெரியும்.

அந்த சம்பவத்தின் முழு பொறுப்பையும் நானே ஏற்றுக்கொள்கிறேன். அங்கே அந்த குண்டு வெடிப்பை நடத்தியது நான் தான். எதற்காக நான் குண்டு வெடிப்பு சம்பவத்தை நடத்தினேன் என்பதை உங்களுக்கு விளக்க தான் நான் இந்த விடியோவை வெளியிடுகிறேன்.

16 வருடங்களாக நானும் இந்த அமைப்பில் ஒரு உறுப்பினராக இருந்துள்ளேன். ஆனால் அப்போதெல்லாம் இந்த அமைப்பு குறித்து நான் தீவிரமாக எடுத்துக் கொள்ளவில்லை. விளையாட்டாக தான் எடுத்துக்கொண்டேன்.

ஒருவருக்கு ஒரு நம்பிக்கை இருப்பது தவறல்ல. நாம் பூமியில் பிறக்கின்றோம், வாழ்கின்றோம், இறந்து போகின்றோம் சிலர் சொர்க்கத்துக்கு செல்வதாகவும், சிலர் நரகத்துக்கு போவதாகவும் நம்புகின்றனர். அது அவரவர் நம்பிக்கை சார்ந்தது. அது தவறல்ல.

ஆனால் இந்த அமைப்பினர், பூமியில் வாழ்கின்ற அனைவரும் அழிந்து போவார்கள் ஆனால் இந்த அமைப்பை சேர்ந்தவர்கள் மட்டும் அழிந்து போக மாட்டார்கள் தொடர்ந்து வாழ்வார்கள் என்று போதிக்கின்றனர்.

850 கோடி மக்களின் அழிவை விரும்புகின்ற ஓர் அமைப்பை நாம் என்ன செய்ய வேண்டும். எனக்கு வேறு வழி தெரியவில்லை. இந்த தவறான அமைப்பையும் அவர்களது போதனைகளுக்கு எதிராக எதாவது செய்தே ஆக வேண்டும்.

இது போன்ற போதனைகள். பிரசாரங்கள் இந்த நாட்டில் தேவையில்லாதது என்ற முழு நம்பிக்கையோடுதான் நான் இதை கூறுகிறேன்.

அடுத்ததாக நான் இப்போதே போலீஸ் ஸ்டேசனிற்கு சென்று சரணடைய போகிறேன். என்னை தேட வேண்டிய அவசியமில்லை.” என்று அவர் அந்த வீடியோவில் கூறியுள்ளார்.

**‘யெகோவாவின் சாட்சிகள்’ என்பவர்கள் யார்?**

‘யெகோவாவின் சாட்சிகள்’, உலகம் அழியப்போகும் தறுவாயில் இயேசு திரும்பி வருவார் என்று நம்பும் ஒரு சிறிய கிறிஸ்தவச் சமூகம்.

1985-ஆம் ஆண்டு, கேரள மாநிலம் கோட்டயத்தில் உள்ள ஒரு பள்ளியில், இந்தச் சமூகத்தைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் பயின்று வந்தனர். அவர்கள் தங்கள் மத நம்பிக்கைகளைக் காரணம் காட்டி, பள்ளியின் காலை கூட்டத்தில் தேசிய கீதம் பாட மறுத்தனர். அப்போதுதான் இந்தச் சமூகம் பரவலான கவனத்தைப் பெற்றது. இதற்காக இந்த மாணவர்கள் பள்ளியில் இருந்து வெளியேற்றப்பட் டனர். பின்னர் இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றது. அம்மாண வர்களைப் பள்ளியில் இருந்து நீக்கியது மதச் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்தி ரத்தை மீறும் செயல் என்று உச்ச நீதிமன் றம் அவர்களுக்கு ஆதரவாகத் தீர்ப்ப ளித்தது.



# காலநிலைக்கு உகந்த விவசாயத்துறை உலக வங்கி பிரதிநிதிகள் களப்பயணம்

கொழும்பு, ஒக். 31

உலக வங்கியின் செயல்பாட்டு முகாமைத்துவப் பணிப்பாளர் அனா பியர்டே, தெற்காசியாவிற்கான உலக வங்கியின் பிராந்திய உப தலைவர் மார்ட்டின் ரைசர் உள்ளிட்ட குழுவினர் திறப்பனையில் உள்ள காலநிலைக்கு உகந்த விவசாயப் பயிற்சிப் பாடசாலைக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை களப்பயணமொன்றை மேற்கொண்டனர்.

காலநிலைக்கு உகந்த நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் முன்னேற்றத்தை ஆராய்வதே இந்தப் பயணத்தின் நோக்கமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்கான தனது உத்தியோகபூர்வ பயணத்தின்போது, உலக வங்கியின் தலைவர் அஜய் பங்காவுடன் விசேட சந்திப்பை நடத்தினார். இலங்கையின் காலநிலைக்கு ஏற்ற, நிலையான விவசாயத் திட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி கோரியிருந்த நிலையில், அது தொடர்பில் ஆராய உலக வங்கியின் செயல்பாட்டு முகாமைத்துவப் பணிப்பாளர் அனா பியர்டே முதன்முறையாக இலங்கை வருகை தந்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தின் திறப்பனை, மன்னக்குளம் கிராமத்தில் ”காலநிலைக்கு உகந்த விவசாயப் பயிற்சிப் பாடசாலை” என்ற பெயரில் விவசாயப் பயிற்சிப் பாடசாலையை அமைப்பதற்கு காலநிலைக்கு உகந்த நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த விவசாய பயிற்சி பாடசாலையானது விவசாயிகளுக்கு காலநிலைக்கு உகந்த விவசாய நடைமுறைகள் மற்றும் அதிநவீன விவசாய தொழில்நுட்பங்களில் நேரடி அனுபவத்தை வழங்கும்.

உலக வங்கியின் செயல்பாட்டு முகாமைத்துவ பணிப்பாளர் அனா பியர்டே மற்றும் தெற்காசியாவுக்கான உலக வங்கியின் பிராந்திய உப தலைவர் மார்ட்டின் ரைசர் ஆகியோரின் பங்களிப்புடன் காலநிலைக்கு உகந்த நீர்ப்பாசன விவசாயம் தொடர்பில் பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



உலக வங்கியின் உதவியுடன் விவசாய அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட ராஜாங்கனை புளி வாழை செய்கைத் திட்டத்தையும் தூதுக்குழுவினர் பார்வையிட்டனர்.

இந்தத் திட்டமானது அந்தந்தப் பகுதிகளிலுள்ள சிறு தோட்ட உரிமையாளர்கள் மற்றும் விவசாயக் குடும்பங்களின் வருமானத்தை குறிப்பிட்டளவு மேம்படுத்த உதவியதுடன் நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்கும் கணிசமான பங்களிப்பை வழங்குகின்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த உலக வங்கியின் செயற்பாட்டு முகாமைத்துவப் பணிப்பாளர் அனா பியர்டே ,

பிராந்தியத்தில் உள்ள விவசாயிகளுக்கு காலநிலை மாற்றம் மற்றும் நவீன விவசாயத்தை மையமாகக் கொண்ட பயிற்சிக் கல்லூரியின் முக்கியத்துவத்தையும், அந்த அறிவை விவசாயிகளுக்கு வழங்குவதன் நன்மைகளையும் சுட்டிக்காட்டினார்.

சூரிய சக்தி உள்ளிட்ட புதுப்பிக்கத்தக்க வலுசக்தி ஆதாரங்களுக்கான அணுகல், டீசல் மீதான அதிகப்படியான சார்பைக் குறைத்தல் மற்றும் நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்குதல் மற்றும் உயர் கல்வி உள்ளிட்ட கல்விக்கான பிரவேச வாய்ப்பைப் பிள்ளைகளுக்கு வழங்குதல், பன்முகப்படுத்தப்பட்ட நிலைபேறான பயிர் விளைச்சல், சிறந்த ஊட்டச்சத்தை உறுதி செய்தல் இதன் முக்கிய நன்மைகள் என்று அவர் சுட்டிக்காட்டிஷனார்.

இந்தத் திட்டத்துக்கு உலக வங்கி ஆதரவளிக்க முடிந்தமையிட்டு மகிழ்ச்சி தெரிவித்த அனா பியர்டே, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களைக் குறைக்க இதுபோன்ற திட்டங்களின் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகளின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த, எவ்வாறு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவது என்பதற்கான எடுத்துக்காட்டுகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# விபத்தில் உயிரிழப்போருக்கான இழப்பீட்டுத் தொகை அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 31

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்கள் மற்றும் ரயில்களில் பயணிக்கும்போது விபத்தில் சிக்கி உயிரிழக்க நேரிட்டால், அவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் இழப்பீட்டு தொகை 5 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்ரெம்பர் 11ஆம் திகதி இளைஞர் ஒருவர் ரயிலில் இருந்து தவறி வீழந்து உயிரிழந்தார். இதே போன்று, கடந்த ஒக்ரோபர் 6ஆம் திகதி கொள் ளுப்பிட்டி மரம் முறிந்து வீழ்ந்ததில் இ. போ. ச. பேருந்தில் பயணித்த ஐவர் உயிரிழந்தனர். இதன்போது, உயிரிழந் தோரின் குடும்பத்தினருக்கு 5 இலட்சம் ரூபாய் இழப்பீட்டு தொகையாக வழங்கப்பட்டது.

கடந்த காலங்களில், இதுபோன்ற சம்பவத்தில் உயிரிழப்பவர் களுக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டது.

போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சரால் இந்த யோசனை அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)





